பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 18 புதன்கிழமை (01-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:82

## இயக்கச்சியில் உயிரிழந்த புலிகளின் சடலங்களை கையளிக்க ஏற்பாடு

### செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்1

இயக்கச்சிப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர் இருவர்களினது சடலங்களை இன்று காலை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடாகியுள்ளது.

மோதலில் உயிரிழந்த இருவரின் சடலங்களும் படையினரால் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களை இன்று பொறுப்பேற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் குருநகர் இறங்குதுறைக்கு அவற்றை எடுத்துச் செல்.

அங்கிருந்து செஞ்சிலுவைக் கொடி பறக்கவிடப்பட்ட படகுகளில் அச்சடலங்களை ஏற்றி கடலேரியூடாக எடுத்துச் சென்று கல்முனை இறங்குதுறையில் வைத்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களிடம் ஒப்படைப்பர்.

1995ஆம் ஆண்டு குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததன் பின்னர் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பல மோதல்கள் இடம்பெற்றன. அவற்றில் உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் சடலங்களைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த 90 கடற்படையினர் தப்பியோட்டம்!

### தியத்தலாவையில் சம்பவம்

கொழும்பு, மார்ச்1

தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த 90 கடற்படையினர் கடந்தவாரம் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தக் கல்லூரியில் பணிபுரிந்த இராணுவ உயர் அதிகாரிக்கும் பயிற்சியாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இவர்கள் தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த விவகாரம் இராணுவத் தலைமைப்பீடத்தால் பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பிரஸ்தாப நபர்களைக் கைதுசெய்ய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(அ-3-7)

## [..]ந்தைமுகாம் மீது ஷெல் தாக்கு

மன்னார்,மார்ச்1

மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாம் மீது நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சேதவிபரங்கள் குறித்துத் தெரியவில்லை. (அ-3-10)

## மூன்று புலிகள் உயிரிழப்பு

வவுனியா,மார்ச்1

வன்னிப் பகுதியில் படையினருடன் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட மோதல்களில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வாழையடிப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் கீர்த்தனா அல்லது அழகிரியா (கோவிந்தசாமி நிர்மலா - கிளிநொச்சி), திலகா (மாணிக்கம் விஜயலக்ஷ்மி - கிளிநொச்சி) ஆகியோரும் -

நேற்று இயக்கச்சிப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் [..]னி (தம்பித்துரை மேரிசுமித்ரா - முள்ளியவளை) என்பவரும் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(அ-3-8)

## வலி .வடக்கு - மாவிட்டபுரத்தில்

# மீளக் குடியமர அனுமதிக்காததை எதிர்த்து அரசு மீது வழக்குத்தாக்கல்

### மனித உரிமை மீறல் என ஆட்சேபம்

கொழும்பு,மார்ச்1

**வலி.வடக்கில் - மாவிட்டபுரத்தில் - மீளக்குடியமர அனுமதிக்காததை ஆட்சேபித்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**மீளக்குடியமர அனுமதிக்காதது மனித உரிமைகளை மீறும் செயல் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்படுவது தொடர்பாக சட்டரீதியான முதலாவது ஆட்சேப நடவடிக்கை இதுவாகும்.**

மாவிட்டபுரம் வாசியான சட்டத்தரணி வி.எஸ்.கணேசலிங்கம் உயர் நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

வலிகாமம் வடக்கில் உள்ள மாவிட்டபுரம் தனது சொந்த இடம் எனத் தெரிவித்து அங்கு மீளக்குடியமர அனுமதி கோரி கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பம் ஒன்றைத் தாம் சமர்ப்பித்ததாகவும் -

ஆனால் பாதுகாப்பு அமைச்சு அங்கு மீளக்குடியமர அனுமதி மறுத்து விட்டதாகவும் -

அவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டமை தனது அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாக அமைகிறது என்றும் - அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா, வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவரும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருமான என்.கே.ஒபடகே, சட்ட மா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(அ-3-7)

## நான்கு கைதிகளை புலிகள் விடுவித்தமை பேச்சுக்களுக்கான நல்ல சகுனம்

### அமைச்சர் ஜெயராஜ் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச்1

"விடுதலைப் புலிகள் தம் வசம் இருந்த நான்கு யுத்தக் கைதிகளான படையினரை விடுவித்தமை பேச்சுக்களுக்கான நல்ல சகுனம்"

- என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்தார்.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமுகமான பேச்சுக்கள் இடம்பெற இது நல்ல நேரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய யுத்தக்கைதிகளையும் விடுவிக்க விடுதலைப் புலிகள்விதிக்கும் நிபந்தனைகளை நேர்வே மூலம் அரசுக்கு தெரியப்படுத்தினால் நல்லது என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் வசமுள்ள 'சாகரவர்த்தன' கப்பலின் கப்டன் போயாகொடவின் மனைவி வன்னியில் தனது கணவனைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் மோட்டார் தாக்கு!

### காயாங்கேணியில் சம்பவம்

வாழைச்சேனை - வாகரை பிரதான வீதியில் காயங்கேணி என்னும் இடத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்.

படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஏவப்பட்ட ஷெல் ஒன்று வீடு ஒன்றின்மீது வீழ்ந்து வெடித்ததில் 4 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த அரியமலர் (வயது 36), கனகம்மா (வயது 50), தங்கம்மா (வயது 22), சுதர்சன் (வயது 4) ஆகியோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ-3-21)

## [..]மாதான முயற்சிகளுக்கு உதவுமாறு [..]திரிகா, ரணில், பிரபாவுக்கு அழைப்பு

### தீர்வைப் பலவந்தமாகத் திணிக்க வேண்டாம்

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க பங்களிப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கு அரசமைப்பு மாற்றத்துக்கான பிரஜைகள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இந்த முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்ற வேளையே இந்த அழைப்பை விடுப்பதெனமுடிவு செய்யப்பட்டது.

பௌத்த, கிறிஸ்தவ மதத்தலைவர்கள், கல்விமான்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டம் அஜித் ரூபசிங்கா தலைமையில் நடைபெற்றது.

யுத்தத்தின் மூலம் தீர்வைப் பலாத்காரமாகத் திணிப்பதற்கு முயற்சிப்பதைக் கைவிட்டு நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர ஜனாதிபதி முயலவேண்டும் என்று கோருவது என்றும் -

சமாதானத்துக்கான வாய்ப்பை நழுவவிடாது முன்னெடுக்க பங்களிப்பை வழங்கவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோரைக் கோருவது என்றும் - அங்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

### 80 நாள்களின் பின்னர்

## குடாக்கடலில் இன்று முதல் மீன் பிடிக்க அனுமதி

குருநகர்,மார்ச்1

குருநகர், பாஷையூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் எண்பது நாள்களின் பின்னர் மீண்டும் இன்று கடற்றொழிலில் ஈடுபடவிருக்கின்றனர்.

யாழ்.கரையோரப் பகுதியில் நிலவிய பதற்றநிலை காரணமாக டிசெம்பர் 10 ஆம் திகதி முதல் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் படை அதிகாரிகளுடன் தொடர்ந்து நடத்திய பேச்சுக்களை அடுத்து இன்று முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு குருநகர் இறங்குதுறையில் மீனவர்களைச் சமுகமளிக்கும்படி படையினர் கேட்டுள்ளனர்.

குடாக்கடலிலும் குருநகர்இறங்குதுறையில் இருந்து 200 மீற்றர் தூரத்திலும், சிறுத்தீவுக் கரையிலிருந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

தோற்றம் 01 - 08 - 1938 மறைவு 13 - 03 - 1999

திதி: 01.03.2000

கண்ணை இமை காப்பது போல் காத்தீர்கள் அப்பா!
விண்ணுலகம் விரைந்து நீங்கள் போனதேனோ?
மண்ணுலகில் நாங்கள் வாழ வழி செய்த தெய்வம் அப்பா - உங்களை
எண்ணும் போதெல்லாம் கண்ணீர்க் கடலாகின்றோம் நாங்கள்.

வெள்ளையுள்ளம் கொண்ட உத்தமரே அப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் வேண்டுகிறோம் கணபதியை
குருநாதர் பாதமலர் சேர்கவென இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

"சிவகிரி"
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்

(74043)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1918 - 01 - 23



மறைவு 2000 - 01 - 31

### அமரர் கதிரவேலு தம்பிப்பிள்ளை

(காரைநகர்)

எங்கள் அன்புத்தெய்வத்தின் 31 ஆம் நாள் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (01-03-2000) புதன்கிழமை 531, பலாலிவீதி, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து எங்கள் துக்கத்தில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் ஒத்தாசை புரிந்த அன்பர்களுக்கும் எங்கள் உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சீமாட்டி, யாழ்ப்பாணம்,
மங்கை, சுன்னாகம்,
531, பலாலிவீதி,
திருநெல்வேலி,

- குடும்பத்தினர்

(C/11247)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பையா

பண்டத்தரிப்பு சில்லாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது பெரிய தம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பையா அவர்கள் வவுனியாவில் 28.02.2000 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சு.பொன்மணியின் அன்புக் கணவராவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

74/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(74101)

தகவல்:
இ.ஜெயபாலன்
(மருமகன்)

## மதகுரு நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,மார்ச்1

பலாலிவீதி, திருநெல்வேலிப் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றின் உரிமையாளர் ஒருவரைத் தாக்கியதாகவும் -

அவரிடமிருந்த ஒருதொகைப் பணத்தைப் பறித்தெடுத்ததாகவும் - தெரிவித்து கோப்பாய் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அதேபகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவரும் அவரது மனைவியாரும் கடந்த 25 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் இ.த.விக்னராஜா மதகுருவையும் அவரது மனைவியையும் 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்கை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(இ-9)

## நூல்வெளியீட்டு விழா

வலி.வடக்கு,மார்ச்1

மல்லாகம் மகாவித்தியாலய நூற்றி நாற்பதாவது வருடம் புத்தாயிரமாம் ஆண்டில் நிறைவுறுவதையொட்டி 'கணிதப்பூச்சரங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கணேசலிங்கம் தலைமையில் மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

ஆசியுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், வெளியீட்டுரையை வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமியும் ஆய்வுரையை தீவக வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் நிகழ்த்துவர்.

(3-86)

## இன்று கொடுப்பனவு

நெல்லியடி,மார்ச்1

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மைக் கால வன்செயல்களினால் வீடுகளை இழந்தவர்களில் சுமார் 14 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம், 14 லட்சம் ரூபா முதலாம் கட்டக் கொடுப்பனவாக இன்று முதல் வழங்கப்படவிருக்கின்றது.

வடக்கு மீள்குடியமர்வு புனரமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்படும் இக்கொடுப்பனவு மாதம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கே வழங்கப்படுகின்றது.

இக்கொடுப்பனவுகள் அவ்வப் பகுதியிலுள்ள வங்கிகள் மூலம் இன்று முதல் வழங்கப்படும்.

(3-109)


**ராஜா**
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
நடித்த
**சூரியவம்சம்**
காட்சிகள்
10.30 – 2.30
(C/11156)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன்,ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
**சுபாஸ்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11243)

**லிபேட்டி**
அச்சுவேலி
சில தினங்கள் மட்டும்
பிரபு, கார்த்திக்
நடித்த
தை பொறந்தாச்சு
காட்சிகள் 10.30, 2.30
T.P 070-212223
070-212678
(73866)


## முகாமைத்துவ மாணவர் மன்றம்

## யாழ். பல்கலைக்கழகம்

எமது மன்றத்தினால் 29.02.2000 அன்று நடைபெற்ற

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:**

1ஆம் பரிசு:- இல. 04133
2ஆம் பரிசு:- இல. 05416
3ஆம் பரிசு:- இல. 01847

அதிர்ஷ்டசாலிகள் 15.03.2000க்கு முன்னர் முகாமைத்துவ மாணவர் மன்றத்துடன் தொடர்புகொள்ளவும். இந் நிகழ்வுக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*பரிசுகளை அன்பளிப்புச் செய்தோர்:*

1ஆம் பரிசு – ஸ்ரீ அபிராமி நகையகம்
3ஆம் பரிசு – STP Computer World.

(74095) – *முகாமைத்துவ மாணவர் மன்றம்.*

## கண்ணீர் அஞ்சலி

சமூகவியல் சிறப்புக்கலை இறுதியாண்டு A பிரிவு மாணவி

**செல்வி க.ராஜினி**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மகேஸ்வரி கதிரமலை**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு குடும்பத்தவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

*சமூகவியல் சிறப்புக்கலை*
*இறுதியாண்டு A பிரிவு மாணவர்கள்*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(74097)

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணபிள்ளை ஜெயபாலசுந்தரம்

(மணிக்கூடு திருத்துநர்)

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெயபாலசுந்தரம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - குணரதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் இராசேந்திரம் (ஜேர்மனி), வசந்தராசா (வன்னி) ஆகியோரின் சகோதரனும் பிரபாஜினி (கொழும்பு), குமுதாஜினி சஞ்சீவ்குமார் (மெக்கானிக்), யசோதாஜினி, ஸ்ரீ ஜெயா, சுகந்தகுமார் (சாவ. இந்துக் கல்லூரி கணிதப்பிரிவு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சநாதன் (மெக்கானிக்) சிவகுமாரி, நாகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் விபூஷன், கார்த்திகா, கீர்த்தனா, சங்கீர்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2000) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அல்லாரை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(74084)

தகவல்:
ஜெ.சஞ்சீவ்குமார்
(மகன்)

### துரைச்சாமி திருஞானசம்பந்தர்

(முன்னாள் எழுதுவினைஞர், யாழ். மாநகர சபை)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி திருஞானசம்பந்தர் நேற்று (29.02.2000) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை மற்றும் பூதிப்பிள்ளையின் அருமை மருமகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், சரஸ்வதி மற்றும் சண்முகரத்தினம், மங்கையர்க்கரசி, இராமச்சந்திரன், சகுந்தலாதேவி ஆகியோரின் அருமைச்சகோதரரும் வசந்தாவின் (கனடா) அன்புக்கணவரும் கஸ்தூரி (கனடா), வினு (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிதரன் (அமெரிக்கா), வானதி, வனஜா, ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.03.2000) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

கனடா விலாசம்:
*Mrs. V.T.Sampanthar,*
*2360 Eglington AVE East.*
*APT # 420, Scarboraugh,*
*Ont - Mik 2P2,*
*Canada.*

(74088)

தகவல்:
நா.மகாநாதன்
(சகலன்)
393/16, கோயில் வீதி,
நல்லூர்.

### ஸ்ரீபன் கிருஷ்ணபிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது ஸ்ரான்லி ஒழுங்கையில் வசித்து வந்தவருமான ஸ்ரீபன் கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (29.02.2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லூசியா மகியின் அன்புக்கணவரும், மேரி ரதிக்கா, (ஆசிரியை, யாழ்/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) யோசப் அனுரா (ஆசிரியர், யாழ்.புனித மரியாள் வித்தியாலயம் - O.L.R), யசோ, வினோ ஆகியோரின் அன்புத் தந்தையும் குறூஸ், சுஜாதினியின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2000) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) புனித மரியாள் ஆலயத்திற்கு (OLR) எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

273/12, ஸ்ரான்லி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(74099)

தகவல்:
யோசப் அனுரா
(மகன்)

# துணை மருத்துவ சேவையாளர் வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

## சுகாதார அமைச்சுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். குடாவில் துணை மருத்துவ சேவையாளர் பதவிகளுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு மக்களுக்கு திருப்தியான சுகாதார சேவைகள் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழு சுகாதார அமைச்சுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். போதனாவைத்திய சாலையிலும் யாழ். குடாவில் உள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் துணை மருத்துவ சேவையாளர்கள் பற்றாக் குறையாக இருப்பதினால் நோயாளிகள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

விசேட வைத்தியர்கள் கடமையாற்றுகின்ற போதும் அவர்களுக்கு வேண்டிய பரிசோதனை ஆய்வுகளைச் செய்து முடிப்பதற்குத் துணை மருத்துவ சேவையாளர்கள் இல்லாதது துரதிர்ஷ்டம் ஆகும்.

எனவே துணை மருத்துவ சேவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


## பதவி வெற்றிடம்

தொலைபேசி இயக்குநர்

பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆங்கில அறிவு மேலதிக தகமையாகக் கருதப்படும். உடனடியாக விண்ணப்பிக்கவும்.

**தம்பி தொலைத் தொடர்பகம்**
**90, கந்தப்ப சேகரம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சாந்தி தியேட்டர் முன்பாக).

(74071)



## இராமகிருஷ்ணர், விவேகானந்தர் புத்தகக் கண்காட்சி

★ கால நிலை சீரற்றிருப்பதாலும்
✶ மேலும் கூடிய ஒழுங்குகள் செய்ய வேண்டியிருப்பதாலும்

1 - 3 - 2000 புதன்கிழமை நடைபெறவிருந்த கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது.

6 – 3 – 2000 திங்கட்கிழமை
மானிப்பாய் மகளிர் கல்லூரியில்
நடைபெறும்.

செயலாளர்,
இராமகிருஷ்ண சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/11248)


## சிகிச்சை முகாம்

யாழ். மார்ச் 1

சங்கானை, பண்டத்தரிப்பு வைத்தியசாலைகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சை பெற்றனர்.

இப்பகுதிகளில் உள்ள மக்களின் நன்மை கருதி இராணுவத்தின் 513 ஆவது படைப் பிரிவினரால் இந்த சிகிச்சை முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்தும் டாக்டர் குழு ஒன்று இந்தச் சிகிச்சைமுகாமுக்குச்சென்றிருந்தது. (உ-135)

## அபராதம்

தென்மராட்சி, மார்ச் 1

தென்மராட்சி, பளை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி கசிப்பு விற்பனை மற்றும் கள் வைத்திருந்தது ஆகிய குற்றங்களுக்காக மூன்று பெண்கள் உட்பட ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானால் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி றொஹான் சஞ்சேராஜீவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அறுவருக்கும் அபராதம் விதித்தார். (இ-117)

# யாழ். பஸ் நிலையப் பகுதி மீண்டும் சேறும் சகதியுமாக!

யாழ்ப்பாணம், மார்ச் 1

கடந்த சில நாள்களாக யாழ். நகரில் பெய்த மழையினால் நகர மத்திய பஸ் நிலையப் பகுதி மீண்டும் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கிறது.

யாழ். பஸ் நிலையத்துக்குச் சென்று வரும் பயணிகள் சேறு பூசிக்கொண்டே பஸ்ஸில் பயணம் செய்யவேண்டிய நிலையிலுள்ளனர்.

மழை காலங்களில் பஸ் நிலையப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பது குறித்தும் பயணிகள் படும் அவஸ்தை குறித்தும் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். [இ-5]

# றோட்டறக்ட் கழக வினாத்தாள் பாடசாலைகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டறக்ட் கழகம் ஒவ்வொரு தவணையும் நடத்தி வரும் பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவு, நுண்ணறிவு தேடலுக்கான பரீட்சையின் இந்தத் தவணைக்கான வினாத்தாள்கள் இன்று முதல் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

கல்வி அமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய பாடத்திட்டப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் முகமாகவே இந்தப்பரீட்சையினை நடத்தி வருகின்றனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கும் இந்த வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

இம் மாதம் 5 ஆம் திகதி வரை வினாத்தாள்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளை கழகத்துடன் தொடர்பு கொள்ளும்படி செயற்றிட்ட இயக்குநர் கேட்டுள்ளார். (இ-4)

## தட்டிவானை விடுவிக்க உத்தரவு

தென்மராட்சி, மார்ச் 1

சாவகச்சேரியிலிருந்து அனுமதிப் பத்திரமின்றி பளையில் உள்ள கடை ஒன்றுக்குச் சாராயப் போத்தல்களை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் தட்டிவானைப் பிணைப் பணத்தில் விடுவிக்க சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

பளைப்பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரணை செய்த நீதிவான் மேற்கண்ட உத்தரவை விடுத்தார். (இ-117)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று வந்துள்ளன.

வவுச்சரில் ஓய்வூதிய நாள் பெப்ரவரி 10 எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட இந்த வவுச்சர்கள் 20 நாள்களின் பின்னரே ஓய்வூதியர்களுக்கு கிடைத்துள்ளன. (இ-111)

## நூல்வடிவில்

சுழிபுரம், மார்ச் 1

பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தினர் ஆசிரியர் இ. ஆறுமுகம் எழுதிய விசவத்தனை முருகப்பெருமான் அடைக்கலப் பதிகத்தை நூல்வடிவில் அச்சிட்டு வெளியிடவுள்ளனர். (இ-28)


## PATRICIAN INSTITUTES
## பற்றீஷன்
## தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**[ஆரம்பம்: 06-03-2000]**

A. DIPLOMA IN MS - OFFICE
B. CERTIFICATE COURSES
1. MS - WORD - 2000
2. MS - EXCEL - 2000
3. MS - ACCESS - 2000
4. MS - POWER POINT
5. VISUAL BASIC VR. 6
6. C ++
7. PASCAL
8. d BASE
9. LOTUS 1 - 2 - 3

[பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மை கருதியும் மாலை நேர வகுப்புகள் (2.30 — 5.00 மணி வரை) ஆரம்பமாகி உள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.]

C. GENERAL MOTOR MECHANISM.
D. SHORT - HAND & TYPING (ENGLISH & TAMIL)

மேலதிக விவரங்களுக்கு
**REGISTRAR**
PATRICIAN INSTITUTES
59, ST. PATRICKS ROAD,
JAFFNA.

(C/11246)



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பல்கலைக்கழக விசேட அனுமதி 1999/2000

1999 / 2000 கல்வி யாண்டுக்கு விசேட பாட அனுமதியில் மொழியியல், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தோர் தேர்வுகளும் அனுமதிகளும் கிளைப் பிரதிப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு, உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி/11245)



# மோக்ஷதீப அழைப்பு



தோற்றம்
20 - 05 - 1936

மறைவு
15 - 02 - 2000

அமரர்
## அருணாசலம் சிவப்பிரகாசம்
(அன்னலிங்கம் ஐயா)

15—02—2000 திங்கள் சிவபதம்அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அருணாசலம் சிவப்பிரகாசம்(அன்னலிங்கம் ஐயா) அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இன்று (01—03—2000)புதன் மூற்பகல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள மோக்ஷதீப ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருகர், பேரர்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

[74079]

# மாணவரிடையே கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களின் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான நாடகப் போட்டிகள் நடைபெற உள்ளன.

எதிர்வரும் 2 ஆம், 3ஆம் 7ஆம் திகதிகளில் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெறும்.

போட்டிகள் நடைபெறவுள்ள பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

★ மார்ச் 2 ஆம் திகதி ஸ்ரான்லிக் கல்லூரியில் — அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

★ மார்ச் 3 ஆம் திகதி புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்தில் —
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், அச்சுவேலி மகா வித்தியாலயம், அச்சுவேலி சென் தெரேசா வித்தியாலயம்

★ மார்ச் 7 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் — சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோசப் வித்தியாலயம், யாழ். கொன்மென்ற் மகா வித்தியாலயம், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ். மத்திய கல்லூரி.

நாடகப்போட்டிகள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். (இ-10)

# நெடுந்தீவில் உள்ள புராதன சின்னங்கள் பாதுகாக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 1
நெடுந்தீவுப்பகுதியில் உள்ள புராதன சின்னங்களைப் பாதுகாப்பதற்கும் அவை உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடியவாறு விளம்பரம் செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்ற யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவினர் அவற்றைப் பார்வையிட்டதுடன் அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

அங்குள்ள புராதன கோட்டைகள், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நடப்பட்ட பாரிய பெருக்கம்மரம், உயர்ந்த மனிதனின் கால்பாதத்தின் அடையாளம், குதிரைலயம், குயின்தா கோபுரம் ஆகியவற்றையே பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

அதேவேளை அங்குள்ள இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் என்பவற்றைப் புனரமைப்பதற்கு வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையிடம் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள மக்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென பொதுக் கிணறுகள், குளங்கள், கேணிகள் என்பனவும் புனரமைக்கப்பட உள்ளன. இவை புனரமைக்கப்படுவதால் அங்குள்ள குதிரைகள் உட்பட கட்டாக்காலி மாடுகள், ஆடுகள் ஆகியவற்றுக்கும் பயன்படவுள்ளன.

அத்துடன் பிரதான இடங்களான துறைமுகம், சந்தை, வைத்தியசாலை, பாடசாலை, நூல் நிலையம் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தேவையான ஆளணியை வழங்குவதற்கு சிபார்சு செய்துள்ளதுடன் குப்பை அகற்றும் வண்டில்கள், உபகரணங்கள், கையுறைகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அங்குள்ள பொது நூலகத்தின் நூலகர் வெற்றிடத்தை நிரப்புவதற்கும் நூல்களைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(இ-10)

## தொலைபேசி வசதி

காரைநகர் பலநோக்குச் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்துக்கு புதிதாகத் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது

(இ-73)

## பஸ் - மினி பஸ் விபத்து

நெல்லியடி, மார்ச் 1
புலோலி கந்த முருகேசனார் சிலையடியில் ஞாயிறு மாலை போக்குவரத்துச் சேவை பஸ் ஒன்றும் மினி பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் பருத்தித்துறை யாழ். வீதியில்போக்குவரத்துத் தடைப்பட்டது.

மினிபஸ்ஸின் முன்புறம் சிறு சேதமடைந்து காணப்பட்டது.

(உ-109)

## தலைமைத்துவ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். நகரப்பகுதியில் உள்ள உயர்தர பாடசாலை மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ கருத்தரங்கு ஒன்று யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் 30 மாணவ தலைவர்கள் கலந்து கொண்டனர். (உ-5)

## கிட்டுப் பூங்கா திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். மாநகரசபையினால் ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிட்டுப் பூங்கா கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் என். ரவிராஜ் பூங்காவைத் திறந்து வைத்தார். மற்றும் இந்த நிகழ்வில் மாநகரசபையின் ஆணையாளர் பொ. பாலசிங்கம், த.வி. கூட்டணியின் உறுப்பினர் எஸ். அரவிந்தன், பிரதி மேயரின் செயலாளர் க. பூலோகரட்ணம் மற்றும் மாநகரசபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ-10)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 — 05 — 1937 | 06 — 09 — 1999 |

அமரர்
**நாகலிங்கம் தம்பித்துரை**
(இளைப்பாறிய சாரதி இ.போ.ச.-கோண்டாவில்)

திதி: 01-03-2000

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாக விளங்கும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

15/14, சங்கிலியன் வீதி,
நல்லூர் வடக்கு. (73952)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | கர்த்தருள் நித்திரை: |
|---|---|
| 1915 — 02 — 17 | 1999 — 03 — 01 |

**திருமதி ஜெயசீலி இரத்தினசபாபதி**

''உள்ளக் கோவிலின் தெய்வம் நீயே''

அன்பில் விளைந்த அழகுசேர் வடிவே!
தாயெனும் சொல்லின் தத்துவப் பொருளே!
துன்ப இருளில் எமைக் காத்த
எங்கள் குடும்ப எழில் ஒளிர்விளக்கே!
தியாகமும் நீயே தெய்வமும் நீயே!
சிறிய குடும்பத் திலகமும் நீயே!
கண்ணை இமைபோல் எம்மைக் காத்த
பெண்ணெனும் வடிவத் தெய்வமே தாயே!
உந்தன் நினைவுக்குள் வைத்தோம்
உள்ளக் கோவிலின் தெய்வம் நீயே!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'கோல்ட்ஸ்'
அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (74067)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 — 10 — 1937 | 13 — 02 — 1988 |

**அமரர் தி. சி. சண்முகலிங்கம்**
(இணுவில் கிழக்கு)

திதி: 01-03-2000

ஒரு கணப்பொழுதில்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு
ஆண்டு ஈராறு ஆனதப்பா
உங்கள் பாசம் எம்மைவிட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பான மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார்.**

''சுகந்தம்'',
இணுவில் கிழக்கு. (74016)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| — — 197 | 31 — 01 — 2000 |

அமரர்
**செல்லப்பா ஐயாத்துரை**

[illegible] - 01 - 2000 திங்கட்கிழமை சிவபதமடைந்த அமரர் செல்லப்பா ஐயாத்துரை அவர்களின் 31 ஆம் நாள் எமது இதயம் நெகிழ்ந்த நினைவஞ்சலியை தெரிக்கின்றோம்.

அன்பும், பண்பும், பாசமும் கொண்டு அனைவரதும் ஆதரவைப் பெற்ற உங்கள் வாழ்வு என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாது நிலைத்திருக்கும்.

ஊழியர்கள்
குலம் கிறீம் ஹவுஸ்.
யாழ்ப்பாணம்.
(1116)

# இந்தியாவில் மரணதண்டனை உடன் ஒழிக்கப்பட வேண்டும்

## சட்டத்துறை அமைச்சர் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 1

குற்றங்களுக்காக மரணதண்டனை விதிக்கப்படும் முறை இந்தியாவில் ஒழிக்கப்படவேண்டும் என்று இந்திய சட்டத்துறை அமைச்சர் ராம் ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற மரணதண்டனை ஒழிப்புத் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போது அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

மரணதண்டனை ஒரு பயனற்ற நடவடிக்கை. இத்தகைய தண்டனைகளால் குற்றங்கள் குறைந்து விடப்போவதில்லை.

குற்றங்களை ஒழிப்பதற்கான தீர்வாக மரணதண்டனை இருக்க முடியாது என்பதே எனது அனுபவக் கருத்தாகும். சர்வதேச ரீதியிலும் மனிதாபிமான அடிப்படையிலும் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்தியா முக்கியமாக வலியுறுத்தி வருகின்றது.

1966 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ. நா. மாநாட்டுப் பிரகடனத்திலும் இது தொடர்பாக இந்தியா கையெழுத்திட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அதேசமயம் —

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரதும் சார்பான கருணை மனு சட்ட அமைச்சகத்தின் பரிசீலனைக்கு இதுவரை வரவில்லை என்று பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

(இ-6-9)

# இந்தியாவும் சிங்கப்பூரும் கடலில் கூட்டுப் போர்ப் பயிற்சி

புதுடில்லி, மார்ச் 1

அந்தமான் தீவுகளுக்கு அப்பால் உள்ள போர்க் பிளேக் கடற்பிரதேசத்தில் இந்திய — சிங்கப்பூர் கடற்படையினர் பெரும் போர்ப் பயிற்சி ஒத்திகை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

எதிரி நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களைத் தேடித் தாக்கி

உலக அரங்கில்

அழிப்பது தொடர்பாக இந்த ஒத்திகைப் பயிற்சி நடைபெறுகின்றது. பதினொரு நாள்கள் தொடர்ந்து இந்த ஒத்திகைநடத்தப்படஉள்ளது

ஒத்திகைப் பயிற்சியில் இந்திய — சிங்கப்பூர் கடற்படையினருக்குச் சொந்தமான ஏவுகணைத் தாங்கிக் கப்பல்கள், விரைவு நாசகாரிக் கப்பல்கள், ஒரு நீர்மூழ்கிக் கப்பல் என்பன ஈடுபட்டுள்ளன. (இ—6—9)

## மருத்துவ உதவி இல்லை

பங்களாதேஷ் பெரும்பாலான மக்களுக்கு நோய்த் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவை தவிர வேறு சுகாதார மருத்துவ உதவிகள் கிடைப்பதில்லை என்று உலக வங்கியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே போஷாக்குக் குறைபாடு பங்களாதேஷிலேயே உண்டு. நாட்டில் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கினர். போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனா - தாய்வான் இடையே பதற்ற நிலை அதிகரிக்கிறது

தாய்பேய், மார்ச் 1

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான பதற்ற நிலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

தாய்வான் சீனாவுடன் இணைவதற்கான பேச்சுக்களை உடன் ஆரம்பிக்காவிட்டால் அதன் மீது பலப்பிரயோகம் மேற்கொள்ளப்படும் என்று சீனா எச்சரித்திருந்தது. இதனை அடுத்து இரு நாடுகளுக்குமான உறவுகளில் முறுகல் நிலை ஏற்பட்டது.

தாய்வானின் அதிபர் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் சீனாவின் எச்சரிக்கை அங்கு பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேநேரம்— தாய்வானின் நீரிணைவட்டாரத்தில் உள்ள சீனப் படைகளை உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சீன அதிபர் ஜியாங் ஷெமின் இராணுவத்தை உஷார்நிலையில் வைத்திருக்க உத்தரவிடும் ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ—6—9)

## அதிகரிப்பு

பெய்ஜிங், மார்ச் 1

சீனாவில் விபசாரத்தொழில் கட்டுப்பாடற்ற விதத்தில் அதிகரித்து வருவதாகக் கலாசார அமைச்சர் கூறி உள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விபசாரத் தொழிலில் ஈடுபடுவோரை அரச திணைக்களங்கள் ஊக்குவித்து வருகின்றன. பொழுது போக்கு நிறுவனங்கள் பல இத்தகைய துஷ்பிரயோகங்களில்ஈடுபட்டு வருகின்றன. நாடு முழுவதும் விபசாரத்துக்கு எதிரான சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதில் கூறப்பட்டது.

# இந்தோனேசிய அதிபர் கிழக்குத்திமோர் விஜயம்

## சுதந்திரத்துக்குப் பின் சென்ற முதல் தலைவர்

டிலி, மார்ச் 1

இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட் நேற்றுக் கிழக்குத் திமோருக்கு விஜயம் செய்தார்.

கிழக்குத் திமோர் இந்தோனேசியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் அங்கு விஜயம் செய்த முதலாவது இந்தோனேசிய உயர் தலைவர் வாஹிட் ஆவார்.

வாஹிட்டின் விஜயத்தை ஒட்டிக் கிழக்குத் திமோரின் தலைநகர் டிலியில் ஐ. நா அமைதிப் படையினர் பாதுகாப்பைத் தீவிரப் படுத்தி இருந்தனர்.

அதிபர் வாஹிட் கிழக்குத் திமோர் சுதந்திரத்துக்காகப் போராடிய ஸனானாவோ குஸ்மாவோ உட்பட உயர் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். கிழக்குத் திமோரில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது குறித்தும் கிழக்குத் திமோருக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசிய அதிபரைப் பார்வையிடுவதற்காக தலைநகர் வீதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். ஆனால் அதிபரின் பாதுகாப்பு நலன்களைக் கருத்திற்கொண்டு ஐ. நா அமைதிப் படையினர் மக்களைக் கலைந்து போகும்படி கோரி வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்பட்டது.

(இ 6-9)

# அதிபர் ஆட்சியின் பதவிக்காலம் ரஷ்யாவில் நீடிக்கப்பட வேண்டும்

## விளாடிமிர் புடின் கோரிக்கை

மொஸ்கோ, மார்ச். 1

ரஷ்ய அதிபரின் பதவிக் காலத்தைத் தற்போது உள்ளதைவிட மூன்று ஆண்டுகளால் அதிகரிக்க வேண்டும் என்று பதில் அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

தற்போது ரஷ்யாவில் அதிபரின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாக உள்ளது. அதனை 7 ஆண்டு கால ஆட்சியாக மாற்ற வேண்டும் என்று புடின் கூறியுள்ளார்.

நான்கு ஆண்டு பதவிக் காலத்தினுள் நாட்டில் எந்த ஒரு முழுமையான மாற்றத்தினையும் செயற்படுத்த முடியவில்லை. எனவே அதிபராட்சிக் காலத்தை நீடிக்க வேண்டியது அவசியம் என்று புடின் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற உள்ளஇந்தநேரத்தில் புடினின் கருத்து வெளியாகி உள்ளது. நடைபெற உள்ள தேர்தலில் புடின் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகக் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு அவர் வெற்றி பெற்றால் 1993 ஆம் ஆண்டின் ரஷ்ய அரசமைப்புச் சட்டத்தைத்திருத்தமுயலக் கூடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(இ-6-9)

# மேற்குக் கரையில் ஒரு பகுதியை ஒப்படைக்க இஸ்ரேல் இணக்கம்

ஜெருசலேம், மார்ச் 1

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக் கரைப் பிரதேசத்தில் 6 சத வீதமான பகுதியை மீண்டும் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்க அந்நாடு இணக்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இதனை அறிவித்தது. கடந்த மாதமே இந்தப்பகுதி பலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இது தொடர்பாக நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததை அடுத்து நிலப்பகுதியைக் கையளிக்க இஸ்ரேல் மறுத்துவிட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக அமெரிக்காவின் விசேட தூதர் டெனிஸ் ரோஸ் கடந்த மாதம் மத்திய கிழக்குக்கு விஜயம் செய்து இரு நாட்டுத் தலைவர்களுடனும் பேச்சு நடத்தினார். ஆனால் அந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறவில்லை.

தற்போது மேற்குக்கரை நிலப்பகுதியைக் கையளிக்கத் தயார் என இஸ்ரேல் திடீரென அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை அடுத்து அமெரிக்காவின் விசேட தூதர் டெனிஸ் ரோஸ் மீண்டும் மத்திய கிழக்குக்கு விஜயம் செய்து இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்குடனும் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துடனும் மீண்டும் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் பின்னர் மேற்குக் கரைப் பிரதேச கையளிப்புத் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஓர் இணக்கம் ஏற்படும் என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

(இ-6-9)

# ஆசே மாநிலத்தில் தாக்குதல்கள் தொடர்ந்தால் படை நடவடிக்கை

## இந்தோனேசிய இராணுவம் எச்சரிக்கை

ஜகார்த்தா, மார்ச் 1

இந்தோனேசியாவின் ஆசே மாநிலத்தில் பிரிவினை வாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வந்தால் அவர்களை அடக்குவதற்கு அங்கு இந்தோனேசியப் படையினர் குவிக்கப்பட்டு படை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்தோனேசிய இராணுவம் அறிவித்துள்ளது.

சுதந்திரம் கோரிப்போராடி வரும் ஒரு மாநிலம் ஆசே ஆகும். கிழக்குத் திமோருக்கு கடந்த ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்டதை அடுத்து இந்த மாநிலத்திலும் பிரிவினைக்கான போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஆசே சுதந்திரப் படையினர் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 300க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதனை அடுத்தே அந்த மாநிலத்துக்கு அதிகளவிலான படையினரை அனுப்ப இந்தோனேசிய இராணுவம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-6-9)

## வரவு - செலவுத் திட்டம்

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்த ஆண்டுக்கான வரவு — செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

# இந்திய விமானக் கடத்தலுக்கும் தலிபானுக்கும் தொடர்புகள் உண்டு

## வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச். 1

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் காத்மண்டுவிலிருந்து புறப்பட்ட இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் உள்ள தலிபான் அமைப்புக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக இந்தியா முதன் முறையாகக் குற்றஞ்சாட்டி உள்ளது.

இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் நாடாளுமன்றில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

கடத்தல்காரர்களும் விடுவிக்கப்பட்ட பயங்கரவாதிகளும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற 10 மணி நேர அவகாசம் அளித்தது தலிபானின் சொந்த முடிவுதான் என்றும் —

விமானக் கடத்தல்காரர்களும் பயங்கரவாதிகளும் சட்டப்படி குற்றவாளிகளாகக் கருதப்பட வேண்டும் என்றும் இந்தியா தலிபானிடம்தெளிவுபடத் தெரிவித்திருந்தபோதும் தலிபான் இவ்வாறு நடந்து கொண்டது என்றும் அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(இ-6-9)

## ஜீ. சீ. ஈ உயர்தரம்

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம்மாதம் 31க்கு முன் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், மார்ச் 1

இந்த ஆண்டுஓகஸ்ட்மாதம் நடைபெறவுள்ள ஜீ சி.ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதி என்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

99 ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் நடைபெற்ற பரீட்சைகளின் அடிப்படையில் நான்கு பாடங்களைக் கொண்ட பரீட்சை இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் (2000, 2001) மட்டுமே நடைபெறும் என்று ஆணையாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கல்வி கற்று விலகிய விண்ணப்பதாரிகள் மட்டுமே தனிப்பட்ட முறையில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.பாடசாலையில் கற்கும் மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் யாழ். மாவட்டத்துக்கான நகர எண்கள் வருமாறு:-

சாவகச்சேரி— 161, யாழ்ப்பாணம் — 162, நெடுந்தீவு — 163, கோப்பாய் — 164, கரவெட்டி — 165, தெல்லிப்பழை — 166, பருத்தித்துறை — 167

இதேவேளை பாடசாலையில் கல்வி கற்கும் குறிப்பிட்ட பரீட்சைக்கு முதற்றடவை தோற்றுகின்ற மாணவர்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி ஆகும். (இ-10)

## காலாண்டுக்கான மருந்து வகை கடந்த வாரம் முதல் விநியோகம்

திருநெல்வேலி, மார்ச் 1

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர்வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பாடசாலை பற்சிகிச்சை நிலையங்கள் ஆகியனவற்றுக்கு இந்த வருட முதலாவது காலாண்டுக்கான மருந்து வகைகள் கடந்த வாரம் தொடக்கம் யாழ் சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் கொண்டு சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை தீவகப் பிரதேசத்திலுள்ள நெடுந்தீவு, நயினா தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை (மந்திகை ) ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகம், அம்பன் அரசினர் வைத்தியசாலை, கரவெட்டி அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றுக்கு மருந்து வகைகள் திணைக்கள லொறி மூலம் கொண்டு செல்லப்பட்டு வழங்கப்படும்.

ஏனைய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் விரைவில் மருந்து வகைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-135)

## பொன்னாலை வயல்களில் வெள்ளம்

மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பொன்னாலை வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

நெல் அறுவடை செய்யும் காலத்தில் மழை பெய்வதால் வயல்களில் வெள்ளம் காணப்படுகின்றது.

இந்த ஆண்டு நல்ல விளைவு ஏற்பட்டும் அறுவடை செய்ய முடியாமல் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ-28)

## வாரம் 2 நாள்கள் சிகிச்சை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சி இந்திரராசா யாழ். நகரிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் வாரத்தில் இரு தினங்கள் நோயாளர்களைப் பார்வையிட்டுச் சிகிச்சை அளித்து வருகின்றார்.

இந்தச் சிகிச்சை நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர் இடமாற்றத்தில் சென்றதை அடுத்து யாழ். சுகாதார சேவை பிரதிமாகாணப்பணிப்பாளரின் பணிப்புரைக்கு இணங்க டாக்டர் இ. இந்திரராசா வாரத்தில் புதன் கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் இங்கு வந்து நோயாளர்களைப் பார்வையிட்டுச் சிகிச்சை அளித்து வருகின்றார். (இ-135)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்பபாணம், மார்ச் 1

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (பெப்ரவரி 29 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு;

### சங்கானை

[121643ஏ], 123375ஏ], [123375பி], [123375சி], [127387ஏ], [129017ஏ], [130733ஏ], [130733பி], [135611ஏ], [135632ஏ], [135675ஏ], [135675பி], [135729ஏ], [135729பி], [135780ஏ], [135780பி], [135858ஏ], [135898ஏ], (135957 ஏ), (135971 ஏ), (138109 ஏ), (138140 ஏ), (138140 பி), (138166 ஏ),

### சாவகச்சேரி

(126033 ஏ), (126033 பி), (130540 ஏ), (131461 ஏ), (131461 பி), (131461 சி), (135433 ஏ).

### கரவெட்டி

(129529 ஏ), (129529 பி),

### கோப்பாய்

(134189 ஏ), (136438 ஏ), (136438 பி), (136783 ஏ),

### நல்லூர்

(128091 ஏ), (128091 பி), (128091 சி), (128092 ஏ), (128321 ஏ), (128324 ஏ), (128324 பி), (128324 சி), (128324 டி), (128324 ஈ), (128330 ஏ). (128330 ஏ), (121768 ஏ), (121768 பி), (127373 ஏ), (131609 ஏ), (131678 ஏ), (131678 பி), (134830 ஏ), (134830 பி), (134830 சி), (135500 ஏ), (135514 ஏ), (135514 பி), (135525 ஏ), (135582 ஏ), (135583 ஏ), (135642 ஏ), (135642 பி), (135642 சி), (135703 ஏ), (135703 பி), (135745 ஏ), (135745 பி), (135745 சி), (135843 ஏ), (135843 பி), (135861 ஏ), (135861 பி), (135916 ஏ), (135944 ஏ) (135950 ஏ), (135950 பி), (135950 சி), (138085 ஏ), (138088 ஏ), (138094 ஏ), (138116 ஏ), (138116 பி), (138177 ஏ).

### பருத்தித்துறை

(131448 ஏ)

### சண்டிலிப்பாய்

(130770 ஏ), (131744 ஏ), (131744 பி), (131810 ஏ), (135505 ஏ), (135537 ஏ), (135537 பி), (135537 சி), (135621 ஏ), 135621 பி), (135649 ஏ), (135777 ஏ), (135869 ஏ), (135830 ஏ), (135785 ஏ), (135888 ஏ), (135892 ஏ),

### தெல்லிப்பழை

(134268 ஏ), (134268பி), (129016 ஏ), (129067 ஏ), (131672 ஏ), (131673 ஏ), (131717 ஏ), (131846 ஏ), (135862 ஏ), (135893 ஏ), (138086 ஏ), (131243 ஏ), (131243 பி), (131243 சி)

### உடுவில்

(134130ஏ), (134130பி), (134130சி), (134222ஏ), (134222பி), (134222சி), (134271ஏ), (136312ஏ), (136313ஏ), (129481ஏ), (129482ஏ), (130565ஏ), (130569ஏ), (130661ஏ), (130661பி), (131582ஏ), (131866ஏ). (134531 ஏ), (134531 பி), (135508 ஏ), (135509 ஏ), (135509 பி), (135585 ஏ), (135724 ஏ), (135724 பி, (135725 ஏ), (135747 ஏ), (135820 ஏ), (125820 பி), (155820 சி), (135851 ஏ), (185851 பி), (135852 ஏ), (135901ஏ), (135949 ஏ), (138091 ஏ), (138150 ஏ), (138151 ஏ), (138171 ஏ), (138229 ஏ). (இ-4)

## 3 போட்டிகளில் யாழ். மாவட்டம் முதலிடம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கலைகலாசாரப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று போட்டிகளில் முதலாமிடங்களைப் பெற்றுள்ளனர்..

பேச்சுப்போட்டியில் செல்வன் தி.திருக்குமரன் (யாழ்ப்பரணம்) என்பவரும் தனி நடிப்புப் போட்டியில் செல்வி வி. விணோதினியும் (தெல்லிப்பழை), சிறுகதைப்போட்டியில் செல்வி வை. வனஜாவும் (புத்தூர்) முதலாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்குத் தலா ஆறாயிரம் ரூபா ரொக்கப்பணமும் வெற்றிக் கேடயமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இந்தப் பரிசளிப்பு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் நடைபெற்றது. (இ-5)

## கைதடிக்கு மின்சாரம்

கடந்த பத்து வருடங்களின் பின்னர் கைதடி மக்களுக்கு மின்வசதி கிடைக்கவுள்ளது.

இன்று புதன்கிழமை தொடக்கம் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி மின்சார சபை அத்தியட்சகர் வே சடாட்சரமூர்த்தி இன்று காலை 9.00 மணியளவில் முறைப்படி மின் விநியோகத்தை கண்டி வீதியில் அமைந்துள்ள மின்மாதிறியிலிருந்து தொடக்கி வைப்பார். (இ-74)


## விற்பனைக்கு

புதிய PANASONIC M 3500 வீடியோ கமரா மற்றும் PENTAX — A 1: 1. 4, 50 M M கமரா லென்சும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **நிதுஷா ஸ்ருடியோ,**
பிரதான வீதி, நெல்லியடி.

(74087)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

**EDNA சொக்களேற்,**
**ஆங்கில மருந்து**
விற்பனை செய்வதற்குப் பிரதிநிதிகள் தேவை.
நேரில் வரவும்.

**குறிஞ்சி பார்மசி,**
இலக்கம் 558, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பரணம்

(சி/11252)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரைவுள்ளது

## கூறு விலைகள் கோரல்

களஞ்சிய அமைப்பு வேலைகளுக்குத் தேவையான கீழ்க் குறிப்பிட்டுள்ள பொருள்கள் செய்து விநியோகிப்பதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

(1) 2 சோடி தள்ளும் இரும்புக் கதவுகள்
(2) 6 இரும்பு உத்திரம்(TRUSS) 48 அடி நீளம்.

இவை சம்பந்தமான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் சங்கத் தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

**கூறு விலைகள் 10 - 03 - 2000 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

பொது முகாமையாளர்.

127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
29-02-2000

(சி/11253)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட் கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)

திருமதி கோ. திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

**திருநாவுக்கரசு சுதர்சன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்
சங்கங்களின் பிராந்திய சபை,
உடுவில் / தெல்லிப்பழை.

(74092)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவு
உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)

திருமதி கோ. திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

**திருநாவுக்கரசு சுதர்சன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிக்கனக் கடன்வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின்
பிராந்தியசபை,
நல்லூர்/ யாழ்ப்பாணம்.

[74091]

## உதயன்

### நல்ல சமிக்ஞை

தமது காவலில் இருந்த பதினைந்து யுத்தக் கைதிகளில் நால்வரை விடுதலைப் புலிகள் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்திருக்கின்றார்கள்.

இந்த விடுவிப்பு மூலம் புலிகள் வெளிப்படுத்தியிருக்கும் நல்ல சமிக்ஞையை — வாய்ப்பை — அரசும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.

புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்குமாறு கைதிகளின் உறவினர்களும் காணாமற்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் போன்றவையும் விடுதலைப் புலிகளிடம் கடிதங்கள், மகஜர்கள் மூலம் பல்வேறு கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருந்த பின்னணியில் —

தம்மை விடுவிப்பதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டு, அதனை ஆட்சேபித்தும், நடவடிக்கை எடுக்கக் கோரியும், புலிகளின் காவலில் இருந்த யுத்தக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

இந்த நிலையில், கைதிகள் விடுவிப்பு விடயம் குறித்து அரசுடன் நேரடிப் பேச்சு நடத்துவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கும் எழுத்து மூல செய்தி ஒன்றைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அரசுக்கு அனுப்பி வைத்தனர்.

எனினும் அரசு ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை ஏதும் எடுத்ததாகத் தகவல் இல்லை.

தம்மைப் பார்ப்பதற்கு வன்னிக்கு வந்த தமது உறவினர்களின் வற்புறுத்தலின் பேரில் — தமது விடுவிப்புக் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு 15 நாள்கள் கால அவகாசம் வழங்கி — தமது உண்ணாவிரதத்தை யுத்தக் கைதிகள் தற்காலிகமாகக் கைவிட்டனர். இந்தச் சூழ்நிலையில் தற்போது நான்கு கைதிகளை விடுவித்து தமது மனிதாபிமானப் போக்கை தமது தலைவர் வெளிப்படுத்தியிருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

பலாலி — கட்டுநாயக்கா பயணிகள் விமான சேவைக்குத் தாம் விதித்திருந்த தடையை நீக்கியிருப்பதாக அண்மையில் புலிகள் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

காங்கேசனுக்கும் திருகோணமலைக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் பயணிகள் கப்பல் சேவை ஒன்று நடப்பதற்கு தமது இணக்கத்தைப் புலிகள் வெளியிட்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இப்போது நிபந்தனை ஏதுமின்றி தம்பாட்டிலேயே கைதிகளை விடுவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நோர்வே அரசின் உதவியுடன் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் கருக்கட்டி வரும் நிலையில், புலிகள் தரப்பிலிருந்து இத்தகைய நல்ல சமிக்ஞைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

பயன்படுத்திப் பலன் பெறுவது அரச மற்றும் ஏனைய தரப்பினரின் இராஜதந்திரத்தைப் பொறுத்தது.

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்ற நிலையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் செய்திருப்பது போல இத்தகைய நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே, அதன் நேர்மையும் உண்மையும் உறுதிப்படும்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு அரசியல் பேச்சுக்கள் மூலமே!

நாட்டின் முக்கியமான பிரச்சினையாக இன்று விளங்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சு மூலமே தீர்வு காணலாம்; வேறு வழி எதுவும் இல்லை என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே பேச்சுக்கு முயற்சி எடுத்துள்ளோம்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவருடன் இடம்பெற்ற செவ்வி வருமாறு:-

### அரசியல் தீர்வுக்கே மக்கள் ஆதரவு

கேள்வி:- இதுவரை காலமும் அரசு யுத்தத்தில் தீவிர கவனம் செலுத்தி வந்தது. திடீரெனப் பேச்சுகளில் ஈடுபட முன்வந்துள்ளமைக்கான காரணம் என்ன?

பதில்:- யுத்தம் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என அரசு மேல்மட்டத்துக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தது. இதன்காரணமாக அரசியல் ரீதியான தீர்வில் நாட்டமில்லாது யுத்தத்தில் தீவிரம் காட்டப்பட்டு வந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் அளித்த தீர்ப்பு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றையே காண வேண்டும் என்பதே ஆகும்.

இதனடிப்படையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காகப் பேச்சுக்கு முயற்சி மேற்கொண்டுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்ற நோக்குடன் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் பெறும் கட்சிகள் மட்டத்தில் இணக்கம் ஏற்பட்டுள்ளது. தற்சமயம் தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடப்படுகின்றன.

அவர்களுடனான சந்திப்பில் பல விடயங்களில் இணக்க நிலை ஏற்பட்டுள்ளது. கலந்துரையாடல்கள் நல்லஆரோக்கியமாக இடம்பெற்று வருகின்றன.

### நோர்வே முயற்சி பலன் அளிக்கும்

கேள்வி:- நோர்வே அரசு இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தலையிட்டுள்ளது. அவர்களின் முயற்சி குறித்து...?

பதில்:- ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் நோர்வே அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகருடன் பேச்சு நடத்திய பின்னர் அவர் இங்கு ஜனாதிபதியுடனும் வெளிவிவ

## அரசின் நிலைப்பாடு இதுவே என்கிறார் அமைச்சர் அலவி

கார அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருடனும் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு பயனுள்ளதாகவும் பலனுள்ளதாகவும் அமைந்திருந்தது. திறந்த மனத்துடன் ஜனாதிபதி நோர்வே வெளியுறவு அமைச்சருடன் கலந்துரையாடினார்.

இந்த முயற்சி வெற்றி



பெறும் என்ற முழுநம்பிக்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் உண்டு.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண அரசமைப்பைத்திருத்த கடந்த இரண்டு மூன்று வருடங்களாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

துரதிர்ஷ்டவசமாக அந்த முயற்சிகளில் பலன் கிடைக்கவில்லை. இப்போதாவது சுமுகமான தீர்வு ஒன்று கிடைக்க நம்பிக்கையுடன் சகலரும் செயற்பட வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்த சகலரும் முன்வராவிட்டால், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பெரும் தொகையைக் கொடுக்க வேண்டி நேரிடும்.

எனவே இந்தப் பேச்சில் சகலரும் நம்பிக்கை வைத்து தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

### தொழிலாளர் மத்தியில் சமாதானக் கருத்தரங்கு

கேள்வி: சமாதானத்துக்காக தங்களின் தொழிற்சங்கங்கள் என்னவிதமானசெயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன?

பதில்: சமாதானத்தை வலியுறுத்தி தொழிலாளர் மத்தியில் 16 கருத்தரங்குகளையும் பல பேரணிகளையும் நடத்தியுள்ளோம்.

மேதினத்துக்குமுன் சமாதானம் ஏற்பட முயற்சி மேற்கொள்ளும்படி அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் கடித மூலம் கோர விரும்புகின்றோம்.

அத்துடன் சர்வதேச நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்கள் மூலமாக அந்த நாடுகளில் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பேரணிகளை மேதினத்தில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்துடன் சமாதானத்துக்காக விசேட பிரார்த்தனைகளை நடத்தி வருகிறோம். கடவுள் இதற்கு ஒரு தீர்வு தருவார் என நம்புகிறோம்.

### யாழ். அதிகாரிகள் விவரம்

கேள்வி:— கொழும்பில் தங்கள் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஆதரவில் அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது யாழ். அரச அதிபர், யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரைப் பதவி விலக வேண்டும் என்று கோரும் பதாகைகளும் காணப்பட்டன. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சங்க கூட்டமைப்புக் கோருகின்றதா?

பதில்:— யாழ். மாவட்டத்தில் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் அரச அதிகாரிகள் பணிபுரிகின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு.

எமது கூட்டுக்குழுவின் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படவில்லை. எமது குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு பிரிவே இதுபோன்ற செயலில் ஈடுபட்டது.

இதனால் அந்த அதிகாரிகளுக்குஏற்பட்ட மனத்தாக்கங்களுக்கு தொழிற்சங்கக் கூட்டுக் குழு தனது கவலையைத் தெரிவிக்கிறது.

### தேர்தலுக்குச் சூழ் நிலை இல்லை

கேள்வி: — வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்களை நடத்தும் திட்டம் உள்ளதா?

பதில்:— வடக்கு - கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகம் பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட

**பேட்டி கண்டவர்**
**மாவை குகன்**

வேண்டும் என்பதே, எமது விருப்பமாகும். ஆனால் அதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை.

நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண உருவாக்கப்பட்ட மாகாண சபைத்திட்டம் அந்த மக்களுக்கு பயன்படவில்லை. புதிய அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படவிருக்கும் பிராந்திய சபைகள் அந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

சபையின் இணக்கத்துடன் உருவாக்கப்படவிருக்கும் பிராந்திய சபைகள் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் எனக் கருதுகிறேன்.

கேள்வி:- யாழ். மாவட்டத்தில் இயங்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தேவையான நிதி உதவிகள் வழங்கப்படுவதில்லை எனக் கூறப்படும்

## யாழ். அதிகாரிகளைப் புண்படுத்த தொழிற்சங்க அமைப்பு முயலவில்லை

முறைப்பாடுகள் குறித்து......?

பதில்:- போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் இந்த நிலை நிலவியது. ஆனால் வரவு — செலவுத் திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அவற்றுக்கான நிதி உதவி வழங்கப்படும். ★

---

**நாளை**

**மாசி 19**

**வியாழக்கிழமை**

திதி: ஏகாதசி
காலை 6.58 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்
பின்னிரவு 2.43 வரை.

சுபநேரம்: 7.57—9.27

ராகுகாலம்: 1.57 3.27

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

**உதய வாக்கு**

மனிதனை விடக் கவிஞன் உயர்ந்தவன். தெய்வம் சாதிக்காததை கவிஞன் சாதிக்கிறான். தேச விடுதலைகளைக் கண்டது கவிதை.

- கண்ணதாசன்

---

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

கொழும்புத்துறை, மார்ச் 1

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''அடியார் கண்டு மகிழ்ந்த அழகன்'' என்ற தலைப்பில் இராமநாதன் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் உரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வு பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி. நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும். அறிமுக உரையை கரணவாய் ஆசிரியை திருமதி வசந்தா கந்தசாமி நிகழ்த்துவார். (இ-30)

### வழிபடுவோர் சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் மகா சபையின் கூட்டம்விரைவில் நடைபெற உள்ளது.

### ஆசிரியர் கலாசாலை மகளிர் தினம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகக்கல்வி மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமையே நடைபெறுகிறது.

இன்று புதன்கிழமை நடைபெற இருப்பதாக நேற்றைய உதயனில் பிரசுரமான செய்தி தவறானது என்று தெரிவிக்கப்படுகிறது.

### தபாற்பொதி வரவில்லை

நேற்று முன்தினம் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பலில் அனுப்பி வைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்ட 900 தபாற்பொதிகள் கப்பலில் ஏற்றப்படாமையால் அவை நேற்று இங்கு எடுத்து வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இலங்கை மின்சாரசபையில் கடமைபுரியும் சின்னவன் பூமிசேகரன் ஆகிய எனது தேசிய, விசேட, வேலை அடையாள அட்டைகள், வீட்டுத் திறப்பு, மூக்குக் கண்ணாடி, ஒரு தொகைப் பணம் என்பன கன்வஸ் பாய்குடன் நாச்சிமார் கோயிலுக்கும் ஆனைக்கோட்டை சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை மின்சார சபை, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (74065)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் இடையில் சுமார் 2½ பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியும் மாடிவீடும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு செ. ந. விஸ்வலிங்கம் சட்டத்தரணி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். T. P. 3153. (74062)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (B Sc, PHYCICAL SCIENCE) ஆசிரியராகப் பணிபுரியும் 31 வயது அவிட்ட நட்சத்திர மணமகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு; இல. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (74078)

### விற்பனைக்கு

இல- 236, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சகல வசதிகளும் கொண்ட வீடு (காணி 1½ பரப்பு) சகல வீட்டுத் தளபாடங்களுடன் உடன் விற்பனைக்கு உண்டு. மேற்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (74075)

### இறைச்சிக்கோழி

Broiler இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல-19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74073)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவித கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி. (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்) (74077)

## மலிவு விலை ரவை விற்றுத்தீர்ந்தது

அரியாலை, மார்ச் 01

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு யாழ் செயலக உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் வழங்கப்பட்ட ரவை விற்று முடிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிலோ 25 ரூபா விலையில் இந்த ரவை விற்கப்பட்டது தெரிந்ததே.

குறைந்தளவு அதாவது — 33 மூடை ரவையே வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் தனியார் வர்த்தக நிலையங்களில் ரவை கிலோ 44 ரூபாவாக விற்கப்படுகின்றது.

(இ-17)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் ஞானலிங்கம்

அச்சுவேலியைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஞானலிங்கம் 25-2-2000 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் — பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும் ஜமிலன் (பிரான்ஸ்), குமுதினி, ரோகினி, காமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசையா மற்றும் கனகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பாலசுந்தரம், நவரத்தினம், இரத்தினசிங்கம், தவமணி, குண்டுமணிதேவி, நிலமணி ஆகியோரின் சகோதரனும் யோகமலர் (கனடா), இராசதுரை (வ. கி. வட. பகுதி ப. நோ. கூ. ச. அச்சுவேலி), காலஞ்சென்ற செல்வராணி, பத்மநாதன், இந்திராதேவி, கலாநிதி தர்மராசா (கனடா), அற்புதநிதி, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சதீஸின் (வலி. கி. வடபகுதி ப. நோ. கூ. ச. அச்சுவேலி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-3-2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தோப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கமலாதேவி (மனைவி)
பிள்ளைகள்.

இராச வீதி,
தோப்பு, அச்சுவேலி. (74076)

## சுப்பிரமணியம் நடராசா

(முன்னாள் இ. போ. ச. நடத்துநர்)

நாவற்குழியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நடராசா 28-02-2000 திங்கள் அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சுப்பிரமணியம் – தையல்நாயகி ஆகியோரின் அன்பு மகனும் சரசாலை காலஞ்சென்ற ஆறுமுகம்-சிவயோகம் ஆகியோரின் அருமை மருமகனும், மனோரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும் கிரிஜா (கனடா), வனஜா (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தென்மராட்சி), சிவமோகன், சிவயோகன் (பொது நூலகம் நாவற்குழி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரனின் (கனடா) அன்பு மாமனாரும் வாரணாவின் (கனடா), அருமைப் பேரனும், பண்டிதர் வேலுப்பிள்ளை (சு. வே), காலஞ்சென்ற தங்கலட்சுமி, கண்மணி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாவற்குழியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (01-03-2000) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பண்டிதர் சு வே வேலுப்பிள்ளை
சு. மகேந்திரராஜா,
(சகோதரன்)

கேரதீவு றோட்,
நாவற்குழி. (74074)

## திருமதி நாகேஸ்வரி சேனாதிராஜா

உடுவில் தெற்கு, யாமாச்சந்தியை (மானிப்பாய்) பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சேனாதிராஜா நேற்று (29-02-2000) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சேனாதிராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி—திருமதி இலட்சுமிப்பிள்ளை சின்னத்தம்பி ஆகியோரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற திரு. திருமதி வல்லிபுரம் தம்பதிகளின் மருமகளும் அரியரட்ணம் (லண்டன்), சிவகுமார் (அவுஸ்திரேலியா), சிவகௌரி ஆகியோரின் அருமைத் தாயாரும் ராஜினி (லண்டன்), வசந்தி (அவுஸ்திரேலியா), தேவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியதர்சனன் (லண்டன்), சௌமியா (லண்டன்), மேனன் (அவுஸ்திரேலியா), வைசாலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனகசுந்தரம் (டென்மார்க்), காலஞ்சென்ற நடராசா, அருமைத்துரை, இரட்ணசிங்கம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சாரதாமணி, ஞானேஸ்வரி, பத்மாவதி, செல்வராஜா, நாகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-03-2000) புதன்கிழமை காலை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்றுத் தகனக் கிரியைகள் பிற்பகல் 1.00 மணிக்குக் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. சே. அரியரட்ணம் (மகன்)

43½, பேர்னாந்து வீதி,
கொழும்பு—06.
தொ. பே. எண்: 596463 (74083)

## கொக்குவில் இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி 2000

காலம்:- 02-03-2000 வியாழக்கிழமை
பி. ப. 1-30 மணி

இடம்:- கல்லூரி மைதானம்

தலைவர்: திரு. பொ. கமலநாதன் (அதிபர்)

பிரதம விருந்தினர்
திருமதி செ. மகாலிங்கம் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்)

சிறப்பு விருந்தினர்
திரு. இ. மகேந்திரன் அவர்கள்
(இளைப்பாறிய அதிபர்)

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[சி-11251]

## கண்ணீர் அஞ்சலி

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மறைவுச் செய்தி கேட்டு தாங்க முடியாத கவலை அடைகிறோம். அவரின் இழப்பினால் துயருறும் அவரது தாய், தந்தைக்கும் சகோதர, சகோதரிக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி
உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.

(74093)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர் (கிளை முகாமையாளர்)
தோழர் திரு. இ. சுகுமார் அவர்களின்
அன்புத் தாயார்


### திருமதி இ. சரஸ்வதி

அவர்களின் மறைவையிட்டு அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர்
தொழிற்சங்கக் கிளை,
(74080) நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22
—
08
—
1954



மறைவு
31
—
01
—
2000

### அமரர் கதிரவேலு சந்திரகுமார் (பவுண்)

46 வயதினிலே பாழ்பட்ட காலனவன்
பறித்தெடுத்த சோகத்தை எப்படித்தான்
தாங்குவதோ?
கண்மூடி விழிக்க முன் கவர்ந்திட்டான் உங்கள்
— உயிரை
அப்பாவே அக்கவலையை எப்படித்தான்
தாங்குவதோ?
31 நாள்களாய் நாங்கள் அழும் ஓசை உங்கள்
காதில் விழவில்லையோ?
மீண்டும் ஒரு பிறவி எடுத்து வந்து எங்கள்
கவலை தீர வருவீர்களா அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

முதலாம் குறுக்குத்தெரு,
இணுவில் றோட்,
மானிப்பாய். [74085]

போதனையை உரியமுறையில் நிறைவு செய்வதாக

# அதிபர்கள், ஆசிரியர்கள் இனிமேல் உடன்படிக்கையில் ஒப்பமிட வேண்டும்

அச்சுவேலி, மார்ச் 1

வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உரிய முறையில் நிறைவு செய்வதாக அதிபர்—ஆசிரியர்கள் உடன் படிக்கையில் கையொப்பம் இடவேண்டும்.

அடுத்த வருடத்தில் இருந்து இத்தகைய புதிய நடைமுறை ஒன்று நடைமுறைக்கு வருகின்றது

பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய இசைவு உடன் படிக்கை நடைமுறை அமுல் படுத்தப்படவுள்ளது.

வகுப்பில் கல்வி போதிப்பதற்குப் பொறுப்பான ஆசிரியர்களும்—அதிபரும் உடன் படிக்கையில் கையொப்பம் இடவேண்டும்.

உடன்படிக்கையின் செயற்பாடுகள் நிறைவு செய்யப்படாத இடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டில்இருந்து அதிபர்—ஆசிரியர்கள் உடன் படிக்கை நடைமுறை அமுலுக்கு வரும் என்றும்—

அது தொடர்பான வரைவுகள், படிவங்கள் தயார் செய்யப்படுவதாகவும்—

இந்த வருட இறுதியில் அவை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும்—

வடக்குக்—கிழக்குமாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-11)

# திரிபோஷா மா விநியோகம் இங்கு அடியோடு இல்லை!.

யாழ்ப்பாணம். மார்ச். 1

யாழ். மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் போஷாக்கற்ற குழந்தைகளுக்கு திரிபோஷாமா விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரையும் செய்யப்படவில்லை.

கடந்த வருடத்தில் ஒரு தடவை மட்டுமே திரிபோஷா யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு விநியோகம் செய்வதற்கு 60 ஆயிரம் திரிபோஷ மாபைக்கற்றுக்கள் தேவைப்படுவதாகவும்—

இவற்றைக்கப்பலில் கொண்டு வருவதற்கு 'கப்பல் கட்டணமாக 4 லட்சம் ரூபா வரையில் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும்—தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவரிடம் யாழ். மாவட்டத்தில் திரிபோசாமா விநியோகம் செய்யப்பட வேண்டியதன் அவசியம்பற்றி வலியுறுத்தப்பட்ட போது தான் கொழும்பு திரும்பியதும் மாதாமாதம் திரிபோஷா மாவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்வதாக அவர் உறுதியளித்திருந்தார். ஆனால் இது வரை இதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-5)

# தென் இலங்கை டாக்டர்களை யாழ். திரும்புமாறு கோரிக்கை

அரியாலை, மார்ச் 1

யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்று மீண்டும் கடமையாற்றுமாறு தென் இலங்கை டாக்டர்களை சுகாதார அமைச்சு பணித்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவிய பதற்ற நிலை காரணமாக இரண்டு மாதகாலத்துக்கு முன்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றிய தென் இலங்கை டாக்டர்கள் தமது இடங்களுக்குத் திரும்பி இருந்தனர்.

இந்த டாக்டர்களை மீண்டும் யாழ்ப்பாணம் சென்று பணிபுரியுமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

(இ - 17)

# உயர்தர மாணவருக்கான மதிப்பீடு: முரண்பாடான தகவல்களால் குழப்பம்

அச்சுவேலி, மார்ச் 1

ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மதிப்பீடு தொடர்பான எழுத்துப் பரீட்சை குறித்து முரண்பாடான தகவல் வெளியாவதை அடுத்துயாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் குழப்பநிலை காணப்படுகின்றது.

ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பு புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கு தவணைக்கு ஐந்து எழுந்துப் பரீட்சையும் ஐந்து செயல்முறைப் பரீட்சையும் நடத்தப்பட்டு இரண்டினதும் சராசரிப் புள்ளிகள் மாணவர் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நடைமுறை பாடசாலைகளில் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு வந்தது. அதனை வலய மட்டக் கண்காணிப்புக் குழு பார்வையிட்டு ஆலோசனையும் வழங்கி வந்தது.

மதிப்பீடு தொடர்பாக எழுத்துப் பரீட்சைகள் நடத்தத் தேவையில்லை என யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேராசிரியர் அருட்பிரகாசத்தினால் வாய்மொழியாக தகவல் பரிமாறப்பட்டது. எழுத்து மூலமான பணிப்பு ஏதும் இன்னும் வழங்கப்படவில்லை.


இதனால் ஜீ.சி.ஈ. உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் ஆசிரியர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் குழப்பநிலை நிலவி வருவதோடு எழுத்துப் பரீட்சை தேவையில்லை என்ற கருத்தும் வலுப்பெற்று வருகின்றது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இது பற்றி விசாரிக்கப்பட்டபோது எழுத்துப் பரீட்சை விடயத்தில் எது விதமான மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

உறுதிப்படுத்தப்படாத — முரண்பட்ட — தகவல்களால் மாணவர்கள் ஆசிரியர்களின் செயற்பாடு பாதிக்கப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(உ-11)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## பாலசுந்தரம் சுகந்தசொருபன்

அன்னை மடியில் 11-10-1979

ஆண்டவன் அடியில் 13-03-1999

திதி, 01-03-2000

சுகந்தா! உன் மதிவதனம் காண்பதெப்போ?
பாதியிலே நீ பறிபோனதென்னவோ?
ஓராண்டு ஓராயிரம் ஆண்டாகக் கழிந்ததடா எமக்கு
குழந்தை என்று எப்போதும் இங்கு முதலிடம் உனக்கு
எமலோகம் செல்ல உனக்கே முதலிடம்
என்று நினைத்தாயோ?
எமையெல்லாம் சோகக் கடலில் மூழ்கவிட்டு
எங்கு சென்றாயோ?
எப்போது தீரும் எமது தாகம்? நீ கூறவேண்டும்
ஏழுஜென்மம் எடுத்தாலும் உனை நாம் சேரவேண்டும்
இந்தத் துன்ப வேதனை தாங்கமுடியவில்லையடா.
மறுபிறவி எடுத்தேனும் எம்மோடு வந்துசேர்ந்திடடா
உனது தெய்வ பக்திக்கு இங்கு யாரும் நிகரில்லையே
அப்படியிருக்கத் தெய்வமும் கண்ணை மூடியதே
நீ வேண்டிய வரமும் இதுதானா?
ஒரு வார்த்தையேனும் பேசினாயா?
தீயிலல்லவா தவிக்கவிட்டுச் சென்றுவிட்டாய்!
ஐயோ தீராது எமது இதயத்தில் ஓலம்
ஐயையோ என்றுமே தீராதடா!

உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
**அம்மா, அப்பா,**
**அண்ணா, அக்காமார்.**

ஆறியந்தறை,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(74020)

# திருமணப் பலகாரங்களை கடகங்களுடன் கடத்திய திருடர்!

நெல்லியடி, மார்ச் 1

திருமண முகூர்த்தத்திற்காக, காத்திருந்த மணப்பெண் ஒருவரின் வீட்டினுள் இரவில் புகுந்த திருடர் கோஷ்டி, அங்கு கடகங்களில் சுட்டு வைத்த பலகார வகைகளை அபகரித்து, அங்கிருந்த இரு சைக்கிள்களில் கட்டிக் கொண்டு தலைமறைவானது.

இந்தச் சம்பவம் அண்மையில் அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலைக்கு அருகில் உள்ள க. ஜெயம் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

அடுத்த நாள் நடைபெறவிருந்த திருமணத்துக்கு இவ் வீட்டினுள்ளோர் ஏற்பாடுகளைச் செய்த பின் நித்திரைக்குச் சென்றனர். அவ்வேளை பார்த்து அங்கு உட் புகுந்த திருடர்களோ, கடகங்களில் வைக்கப்பட்டிருந்த பலகார வகைகளை எடுத்து அங்கு காணப்பட்ட இரண்டு சைக்கிள்களில் கட்டிக் கொண்டு தலைமறைவாகினர்.

இது குறித்து மணப் பெண்ணின் தந்தை பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, தேடுதல் நடத்திய பருத்தித்துறை பொலீஸார் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்தவர்களான, கந்தசாமி றமேஸ்குமார் (வயது 26), சுப்பிரமணியம் மதியரசன் (வயது 24), முத்துலிங்கம் சதீஸ்குமார் (வயது 20) ஆகிய மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவர்களை மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

(உ-109)

# அதிபர் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை இங்கு?

யாழ்ப்பாணம், மார்ச் 1

தரம் III அதிபர்களின் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அதிபர் சங்கத்தைச் சேர்ந்த மு. செல்லையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்—

ஜனாதிபதி, வட.மாகாண அதிபர் சங்கம், கல்வி அமைச்சு கல்விச் சேவைகள் ஆணைக்குழு, வடக்கு — கிழக்கு மாகாண சபை ஆகிய உயர் மட்டங்களுக்கு இந்தக் கோரிக்கை தொடர்பான மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் —

தமிழ்க் கட்சி ஒன்று ஊடாகவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

இன்னும் சில நாள்களில் இதற்குச் சாதகமான முடிவு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் — தெரிவித்தார்.

(உ-8)

# டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 1

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பயிற்சி நெறியின் பகுதி ஒன்று பரீட்சைகள் அடுத்த மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கு உரிய அனுமதி அட்டைகள் யாவும் விரைவில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும்—

கடந்த வருடம் நடத்தப்பட்ட பரீட்சைகளில் நூனசித்திபெற்றவர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும்—

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார்.

(உ-7)

# கிறிஸ்தவ இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 1

பொதுமக்களின் நன்மை கருதி யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நோயாளர்களை ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் சேவை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இந்த அம்புலன்ஸை வாடகைக்கு அமர்த்துபவர்களிடமிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு 1.5 ரூபா வீதம் அறவிடப்பட்டு வருகிறது.

அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ். கண்டி வீதியிலுள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (உ-5)

# இரசாயன மருந்துகள் பூசப்பட்ட 2,000 நுளம்பு வலைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் இரசாயன மருந்து பூசப்பட்ட இரண்டாயிரம் நுளம்பு வலைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக குழந்தைகளை பிரசவித்த தாய்மாருக்கு இத்தகைய வலைகள் விநியோகிக்கப்பட்டன.

ஆறு மாதத்துக்கு ஒரு தடவை இந்த வலைகளுக்கு மருந்து பூசப்பட வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகங்களில் இம் மருந்தினைப் பூசிக்கொள்ள முடியும் என்றும் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வருடத்தில் மேலும் பல நுளம்பு வலைகள் சுகாதாரத் திணைக்களத்தினால் யாழ். குடாவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-9)

## யாழ். மாநகரசபையின்

# ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கு உள்ளூர் ஆசிரியரை நியமிக்குக

## புளொட் உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாநகர சபையினால் நடத்தப்படவுள்ள ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களுக்கு உள்ளூரிலுள்ள ஆங்கில ஆசிரியர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று யாழ். மாநகர சபை உறுப்பினர் எம். தவநாதன் (புளொட்) மாநகர சபையின் பிரதி மேயர் எஸ். ரவிராஜுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களைத் தங்கள் கட்சியின் சார்பில் யாழ். நகரில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவரும் தங்கள் முயற்சியை வரவேற்கின்றோம்.

இந்த வகுப்புக்களினால் எமது தமிழ்ச் சமுதாயம் முழுமையான பயனை அடையும் என்று நம்புவதுடன் இந்தப் பயிற்சி வகுப்புக்களுக்கு உள்ளூர் ஆசிரியர்களைப் பயன்படுத்துவதே நம் நாட்டுக் கல்விமான்களுக்கு நாம் வழங்கும் கௌரவமாகும் — என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# தெல்லிப்பழை செயலர் பிரிவில் 100 வீடுகளை அமைக்கத்திட்டம்

வலி.வடக்கு, மார்ச் 1

வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் ஜனஉதான மக்கள் எழுச்சிக் கிராமத்திட்டத்தின் கீழ் நூறு வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த வீடுகளை மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் நிர்மாணிக்க நட.வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 25 வீடுகளும் அளவெட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 25 வீடுகளும் கட்டுவன் கிராம அலுவலர் பிரிவில் 50 வீடுகளும் நிர்மாணிக்கப்படும்.

இந்த 55ஆயிரம் ரூபா நிதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் 30 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இதில் 10 ஆயிரம் ரூபா மானியமாகவும் 20 ஆயிரம் ரூபா கடனாகவும் வழங்கப்படும்.

பிரதேச செயலகத்தினால் 25 ஆயிரம் ரூபா மானிய அடிப்படையில் வழங்கப்படும்.

வடமாகாண புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபையின் நிதியில் இருந்தும் இந்தப் பணம் வழங்கப்படவுள்ளது.

## மேல் நாட்டு மோகத்தால்

# எமது கலாசாரம்மாறி பண்பாடு சிதைவடைகிறது

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 1

மேல் நாட்டு மோகத்தினால் எமது மக்களின் கலாரசனை மாறி வருவதனால் எமது பண்பாடு சிதைவடைகிறது.

யோசப் பாலாவின் ''கிசு கிசு 100'' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருள்திரு. லூயி பொன்னையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துரை ஆரோக்கியதாசன் தலைமையில் சுத்தோவிக்க கலை, இலக்கிய வட்டத்தினால் யாழ். மறைக்கல்வி மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த வெளியீட்டு விழாவில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

இன்று பல வடிவங்களில் எம் மக்களிடையே கிசு கிசுப்புகள் பெருகி முணுமுணுக்கின்றன. இதனை எழுத்தாளர் யோசப்பாலா புதிய வடிவில் படைத்துள்ளார்.

எழுத்தும் வாழ்வும் சமனாக வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரண யதார்த்த வாதியாக சமூக, சமய, கலை, கலாசாரப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி ஓய்வின்றி உழைக்கும் இவர்'கிசு கிசு 100' மூலம் சமூகத்தின் நெழிவு, சுழிவுகளை நாசூக்காகச் சுட்டிக்காட்டி உணர வைப்பதில் வெற்றி கண்டுள்ளார்.

எமது மண்ணில் திறமைசாலிகளை ஊக்குவிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, சமய, சமூக நிறுவனங்கள் முன் வராதபோது அந்நியநாட்டு மோகத்தில் எமது மக்களின் கலாசார ரசனை மாறுவதை எவராலும் தடுக்க முடியாததாகி விடுகிறது.

எமது பண்பாடு, நாகரிக சிதைவுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

ஆசியுரையை அருள்திரு. ஜே. பி. ஈ. செல்வராஜா அடிகளாரும் வாழ்த்துரையை யாழ். ஜெயமும், வரவேற்புரையை கவிஞர் அபீர்ராஜனும் நிகழ்த்தினர்.

நூலாசிரியர் யோசப் பாலா நன்றியுரை நிகழ்த்தினார்.

(இ-5)

# குடிதண்ணீர் விநியோகப் பயிற்சி

நெடுந்தீவு, மார்ச் 1

குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஒரு வாரப் பயிற்சிநெறி இன்று புதன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனப்பணியகத்தில் ஆரம்பமாகும்.

ஒரு வாரம் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறிகளில் மாநகரசபை, நகர சபை, பிரதேச சபையின் நீர் விநியோகப் பகுதியின் ஊழியர்கள் கலந்து கொள்வார்கள்.

பயிற்சிகள் ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வில் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். கிருஷ்ணசாமி மற்றும் சபைகளின் தலைவர்கள், அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.

(இ-111)

# நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 1

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெறவரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக இந்த வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்குப்பற்றாக்குறை நிலவிவருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இந்த வருட முதலாவது காலாண்டுக்கான மருந்து வகைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் இங்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

# நெடுந்தீவுக்கு உழவு இயந்திரம்

நெடுந்தீவு. மார்ச் 1

நெடுந்தீவு பிரதேச சபை புதிதாகக் கொள்வனவுசெய்த இரண்டு சக்கர உழவு இயந்திரம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு வந்து சேரவுள்ளது.

ரூபா 3 லட்சத்து 60 ஆயிரம் விசேட மூலதன நிதியில் இந்த உழவு இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டது.

(இ-111)

# பழைய மாணவர் சங்கம் அன்பளிப்பு

வலி. கிழக்கு, மார்ச் 1

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி அபிவிருத்தி வேலைக்கென பழைய மாணவர் சங்கம் ஒரு லட்சம் ரூபாவை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது.

இப்பாடசாலையின் வகுப்பறைகள் புனரமைப்பு, நீர் விநியோக வேலைகள், நூலக அபிவிருத்தி போன்றவற்றுக்கே இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

இதன் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டதாகவும் பாடசாலை அதிபர் திருமதி எஸ். விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

இந்த நிதியில் பழையமாணவர் சங்கக் கனடாக் கிளை 75 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

[இ-180]

## விளையாட்டரங்கு

# மணிவதனன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

மறைந்தும் மணம்பரப்பும் மத்தியில் மணிவிளக்கு மணிவதனன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

9 வீரர்கள் பங்குபற்றும் 15 ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியின் ஒவ்வொரு ஆட்டத்திலும் தெரிவுசெய்யப்படும் ஆட்டநாயகனுக்கு விருது வழங்கப்படும்.

இறுதிப்போட்டியில் தெரிவு செய்யப்படும் சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த சகலதுறை ஆட்டக்காரர், ஆட்டநாயகன் ஆகியோருக்கு ஆட்டத்தொடரின்நாயகனுக்கும் பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சகல ஆட்டங்களிலும் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்பவர்களுக்கும் 5 விக்கெட்டுக்களையோ அல்லது அதற்கு அதிகமான விக்கெட்டுக்களையோ வீழ்த்துபவர்களுக்கும் விரைவாக அரைச்சதம் அடிப்பவருக்கும் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-4)

## மேற்கிந்தியத் தீவுகள் அணியின்

# அணித்தலைவர் பிறயன் லாரா பதவியை ராஜினாமாச் செய்தார்

அன்டிகுவா, மார்ச் 1

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் பிறயன் லாரா தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

தனது ராஜினாமாத் தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அவர் அனுப்பிவைத்த கடிதத்தில், ''கடந்த இரண்டு வருடங்களில் நாம் அனுபவித்த சராசரி வெற்றிகளும் பாதகமான வீழ்ச்சிகளும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் துறையை கேள்விக்குறியாக்கி விட்டுள்ளது. இந்த நிலையில் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொள்வதே பொருத்தம் என்பதை நான் உணருகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 2-0 என்ற கணக்கில் ரெஸ்ட் தொடரிலும் 5-0 என்ற கணக்கில் ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரிலும் படுதோல்வியைச் சந்தித்ததே லாரா பதவியை ராஜினாமாச் செய்ததற்கான உடனடிக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ-4)

# வலைப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்1

யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 17 வயதுப் பிரிவு

★ கன்னியர் மடம் மகா வித்தியாலயம எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

★ நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

### 19 வயதுப் பிரிவு

★ கன்னியர்மடம் மகா வித்தியாலயம் எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

இந்தச் சுற்றுப்போட்டிகளில் 15 வயதுப் பிரிவில் 6 பாடசாலை அணிகளும், 17 வயதுப்பிரிவில் 7 பாடசாலை அணிகளும், 19வயதுப்பிரிவில் 6பாடசாலை அணிகளும்பங்குபற்றுகின்றன. (இ-4-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்1

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டிகளில் அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

★ சரவணபவானந்த வித்தியாலயம் எதிர் அத்தியார் இந்துக்கல்லூரி.

★ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் உரும்பிராய் சைவப் பிரகாச வித்தியாலயம்.

### 17 வயதுப் பிரிவு

★ நடராஜ ராமலிங்க வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக்கல்லூரி.

★ அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயம் எதிர்சரவணபவானந்த வித்தியாலயம்

★ புனித தெரேசா மகளிர் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

### 19 வயதுப் பிரிவு

★ அச்செழு மகா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக்கல்லூரி. (இ-4)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ காலை 8.30 மணிக்கு— மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் புனித அந்தோனியார். (துரையப்பா விளையாட்டரங்கு)

★ பிற்பகல் 2.30 மணிக்கு — ஹாட்லிக் கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி. (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

### 18 வயதுப் பிரிவு

★ காலை 8.30 மணிக்கு — மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் நாவாந்துறை றோ. க. வித்தியாலயம். (துரையப்பா விளையாட்டரங்கு)

★ பிற்பகல் 2. 30 மணிக்கு — தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

இந்தச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு ஆகிய இரண்டிலும் தலா 8 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

(இ-4-10)

# தென்மராட்சியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு மூன்று மாதத்துக்கு நிவாரணம் வழங்கப்பணிப்பு

தென்மராட்சிப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு மூன்றுமாத கால நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாழ். செயலக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் 12ஆம் திகதிக்குப் பின் தென்மராட்சி மேற்குப் பகுதி உட்பட சில இடங்களில் நிலவிய பதற்றமான சூழ்நிலைகளையடுத்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்தன.

இடம்பெயர்ந்த இவர்கள் மீளக் குடியமராததால் வருமானம் எதுவுமின்றி பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துவந்தனர்.

இது தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து இவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் இவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

# மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகள்

திருநெல்வேலி.மார்ச்1

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகள் அவற்றிற்கான காரணங்கள், தீர்வுகள் என்பன பற்றிய கருத்தரங்குகளைப் பாடசாலை மட்டத்தில் இன்று முதல் எட்டாம் திகதிவரை நடத்தவுள்ளது.

இந்தக் கருத்தரங்குகளில் விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள் உட்படப் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள சுமார் ஆறாயிரம் மாணவ, மாணவிகள் இதில்கலந்துகொண்டு பயனடைவார்கள் என்று யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நடிகர்கள் தேவை

எமது நிறுவனம் கண்ணிவெடி சம்பந்தமான சமூக விழிப்புணர்வு நாடகம் ஒன்றினைத் தயாரித்து மேடையேற்றவுள்ளது. இந்நாடகத்தில் தொண்டு அடிப்படையில் பங்குபற்றி நடிப்பதற்கு நடிகர்கள் தேவை. நடிப்புத்துறையில் ஆர்வமும் சமூகசேவை மனப்பான்மையும் உடைய அனைவரும் (வயதெல்லை இல்லை) வரவேற்கப்படுகின்றார்கள்.

03-03-2000 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP),
யாழ். புனர்வாழ்வு மீள்குடியேற்ற
நிகழ்ச்சித்திட்டம் (JRRP)
125, கோயில் வீதி, நல்லூர்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## முறைசாராப் பயிற்சிநெறிகள் - 2000

1. சுருக்கெழுத்து தட்டெழுத்து (தமிழ்)
2. நூலகர் சேவை

மேற்படி பயிற்சிநெறிகள் எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயில விரும்புவோர் தமது விண்ணப்பப்படிவத்தை காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 07.03.2000

(C/11256) — அதிபர்

## யாழ்.மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)
## மெய்வல்லுநர் போட்டி - 2000

நேற்று (29.02.2000) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் மெய்வல்லுநர் போட்டி இன்று (01.03.2000) புதன்கிழமையும் இன்று (01.03.2000) புதன்கிழமை நடைபெறவிருந்த இடைநிலைப் பிரிவின் மெய்வல்லுநர் போட்டி நாளை (02.03.2000) வியாழக்கிழமையும் நடைபெறும்

சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/11261) - அதிபர் -

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்
### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,
சாவகச்சேரி.
(C/11254)

## மெய்வல்லுநர் போட்டிகள்

குருநகர்,மார்ச்1

புனித றோக்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் தி.சத்தியபாலன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

யாழ். கல்விக்கோட்ட அதிகாரி ஆ.ராஜகோபால் பிரதம விருந்தினராகவும் வண.பிதா.எமில் ராஜேஸ்வரன் போல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (3-4-51)

* * *

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் பாடசாலைக்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.பாலசிங்கமும் முன்னாள் அதிபர் திருமதி த.இராமசாமியும் கலந்துகொள்வர். (3)

* * *

குருநகர்,மார்ச்1

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதம விருந்தினராகவும் யாழ். மனித முன்னேற்ற நடுநிலையப் பணிப்பாளர் அருட்தந்தை சீ.ஜி.ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (3-51)

* * *

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆர்.ஞானசேகரம்பிள்ளை தலைமையில் திக்கமுனை மைதானத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கே.கமலேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆர்.விக்கினேஸ்வரமூர்த்தி கௌரவ விருந்தினராகவும் இதில் கலந்துகொள்வர். (3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்1

நல்லூர் கோட்ட மட்டத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மேலதிக ஆசிரியர் பெயர் விவரங்களைக் கொண்டு வருமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-3)

* * *

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி வலய அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. (3)

## வாகனத்திருத்தத்துக்கான அவசர கூறுவிலை கோரல்

இல: 16, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் பணிமனையிலுள்ள 'பஜிரோ ஜீப்' இன வாகனத்தின் கீழ் குறிப்பிடப்படும் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கான கூறுவிலைகள் பொருத்தமானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

1) வாகனத்தின் இயந்திர (எஞ்சின்) முழுமையான திருத்தவேலை (போரிங், கிராங் வெட்டல் உட்பட)
2) வாகன இயந்திர அறை வர்ணம் (வெள்ளை நிறம்) பூசுதல்.

மேற்குறித்த வேலைகளுக்கான கூறுவிலைகளைச் சமர்ப்பிப்போர் 07.03.2000ஆம் திகதிக்கு முன்பாக பணிமனையில் ரூபா 25/- (இருபத்தைந்து) செலுத்தி அதற்குரிய படிவத்தினைப்பெற்று விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தினை பணிமனையில் காலை 9.30 இலிருந்து மாலை 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 07.03.2000ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பணிமனையில் வைத்துத் திறக்கப்படும்.

வைத்தியகலாநிதி உ.சிவபாதசுந்தரம்,
மாகாண பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.
(C/11257)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்
### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து ஆறாத்துயர் அடைகின்றோம். பாசமிகு புதல்வனின் ஈடுசெய்ய முடியாத இழப்பால் தீராத் தயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.
(C/11260)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### டொறத்தி இராசம்மா செல்லத்துரை

இருபாலையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி டொறத்தி இராசம்மா செல்லத்துரை அவர்கள் கொழும்பில் 28.02.2000 அன்று மாலை 7.30 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி யேசுதாசன் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் S.T.செல்வம் (பொறியியலாளர், இல்மனைற் கூட்டுத்தாபனம், புல்மோட்டை), றூபா நேசராஜா (கொழும்பு), S.R.இயேசுபாலன் (கிராம உத்தியோகத்தர், உடுவில்), S.T.தயாநிதி (பொறியியலாளர், புறூனை) ஆகியோரின் அன்புத் தாயாரும் றூபி (கொழும்பு), நேசராஜா (முகாமையாளர், இலங்கை வங்கி, வவுனியா), அனந்தா (உடுவில்), வதனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிராங், புளொய்ட், நிம்மி, சாமலின், தாமரி, மித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் கொழும்பில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7, Seevali Road,
Off Sumanarama Rd.,
Mount Laveniya.
Tel: 01-732888

தகவல்:
S.R.இயேசுபாலன்
(மகன்)
உடுவில்
(தற்பொழுது கொழும்பில்)
(74100)

### திருமதி செல்லம்மா கனகசபை

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த திருமதி செல்லம்மா கனகசபை நேற்று (29.02.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசக்திவேல் (குமரேசு), பாலகிருஷ்ணபிள்ளை (முன்னாள் விற்பனைப் பிரதிநிதி,யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்), பவானி அம்மா (அம்பிகா), கைலநாதன் (இராசா, சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உலகேஸ்வரி (கனடா), சரோஜினிதேவி, தெய்வேந்திரம் (ஜேர்மனி), குலராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சத்தீஸ்வரி, ரகுராஜ், சத்தீஸ்வரன், அனுஷா, சிவயோகேஸ்வரி, ஜெயலிங்கம், கோணேஸ்வரன், ரோகினி, திருக்கேதீஸ்வரன், நந்தா, கோகுலேஸ்வரன், சிவகௌரி, தர்மசீலன், பாலகுமார், பாலவதனி, கலாநிதி, மோகன்குமார், சிறீதரன் மஞ்சுளா, மஞ்சுளாநிதி, அருளானந்தம், கிரிதரன், சந்திரவதனி, இராஜநந்தன், இராஜநந்தினி, குட்டி, சுவிந்தன் ஆகியோரின் பேர்த்தியும் பவானந்த், டிலக்சினி, யதுஷா, கீர்த்திக், யசுதன், தினேஸ், ஜீவகீதன், ரிஷிகரன், கோகுலகீதன், கஜலக்சன், கௌசிகன், பகீர்த்தனா, விபூசன், திபூஷா, தர்மினி, அதிஷன், மிதுஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

687/15, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

தகவல்:
க.பாலகிருஷ்ணபிள்ளை (மகன்)
தெ.பவானியம்மா (மகள்)
(C/11259)

# சாரதாம்பாள் கொலைச் சம்பவம்; மீள் விசாரணைக்கு உத்தரவு!

புங்குடுதீவில் அந்தணப்பெண் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு கிழமைக்குள் விசாரணை மேற்கொண்டு விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லை தவிர்ப்புக் குழு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்கவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக் குழுவின் விசேட கூட்டத்திலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி சி.ஐ.டி. பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்,கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சாரதாம்பாளின் படுகொலை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் -

அது தொடர்பான விசாரணைகள் பெரிதும் மந்தகதியில் நடத்தப்படுவதாகவும் -

எனவே சாரதாம்பாளின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தி விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை தொல்லை தவிர்ப்புக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் - மேற்படி கூட்டத்தில் சி.ஐ.டி. பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, சாரதாம்பாளின் படுகொலை தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் நடைபெறுவதாக முறைப்பாடு செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர்களான எஸ்.அரவிந்தன், ரி.முகுந்தன், சி.கணேந்திரன் ஆகியோரை இம்மாதம் 6ஆம் திகதி காலை 11.30 மணிக்கு தொல்லை தவிர்ப்புக்குழுவின் முன் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-7-3)

## தப்பி ஓடிய படையினர் மீள இணைய மன்னிப்புக்காலம் மீண்டும் நீடிப்பு!

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினர் மீண்டும் படையில் இணைவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புக்காலம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் வழங்கப்பட்ட ஒரு வார பொது மன்னிப்புக் காலத்தில் மீண்டும் இராணுவத்தில் இணைந்த சிப்பாய்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததை அடுத்தே பாதுகாப்பு அமைச்சு பொது மன்னிப்புக் காலத்தை மேலும் நீடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மன்னிப்புக் காலத்தில் இராணுவத்தில் வந்து இணைவோருக்குஎவ்வித தண்டனையும் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அணி வெற்றிபெறும் நிலையில்!

ராவல்பிண்டி,மார்ச்1

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ராவல்பிண்டியில் நடைபெற்றுவரும் முதலாவது ரெஸ்ட் போட்டியில் ஆட்டநேர இறுதியில் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பு எதுவுமின்றி பதினொரு ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக, பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 390 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யூனிஸ் ஹான் 107 ஓட்டங்களையும், வாசீம் அக்ரம் 79 ஓட்டங்களையும் பெற்றனர். வாஸ், சொய்ஸா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் 219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் எனக் களம் இறங்கிய இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களைப் பெற்றது. சனத் 5 ஓட்டங்களுடனும், அத்தப்பத்து 6 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருந்தனர். (அ-8)

### நாடகப் போட்டி

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள புதிய கல்விச்சீர்திருத்தம் தொடர்பான நாடகப்போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன் தலைமையில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

### 17 இளைஞர்கள் விடுவிப்பு

வவுனியா,மார்ச்1

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு பதுளை - பிதுனுவேவ புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வன்னிப்பகுதியைச் சேர்ந்த 17 தமிழ் இளைஞர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.சிறீதரன் பதுளைக்குச் சென்று விடுதலை செய்யப்படுபவர்களை வவுனியாவுக்கு அழைத்து வந்து உறவினர்களிடம் கையளிப்பார் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு விடுதலை செய்யப்படுவோர் வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். (அ-7-164)

### எட்டு இளைஞர் விடுவிப்பு

வவுனியாவில் நிலைகொண்டுள்ள 211ஆவது பிரிகேட் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 இளைஞர்கள் நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் இருவர் முஸ்லிம் இளைஞர்கள், ஒருவர் சிங்களவர். ஏனையோர் தமிழர்களாவர். (அ-7-164)

## வண்ணை சிவன் உற்சவம் நாளை ஆரம்பமாகின்றது

பிரசித்திபெற்ற யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 22 தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். தினமும் இரவு உற்சவங்கள் 8 மணிக்குப் பூர்த்தியாகும். (அ-3-4)

## மேலும் 500 படையினர் புலிகள் வசம் உள்ளனராம்

### இராணுவ அதிகாரி சொல்கிறார் இப்படி!

வன்னியில் விடுதலைப் புலிகளின் வசம் மேலும் 500 படையினர் யுத்தக் கைதிகளாகத் தடுத்து வைக்கபட்டுள்ளனர் என இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்றுத் தகவல் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட 4 படையினர் இந்தவிடயம் குறித்து விரிவான தகவல்களை வெளியிட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை போன்ற இடங்களில் உள்ள பதுங்கு குழிகளில் இந்தப் படை வீரர்களும், ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-3-7)

## வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நிலைமை: கொழும்பில் வெள்ளியன்று மாநாடு

கொழும்பு,மார்ச்1

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரச அதிபர்கள் பங்குபற்றுவர்.

இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் உயர்மட்ட படை அதிகாரிகளும் பங்குபற்றுவர். (அ-3)

### முல்லையின் மாபெரும் கலைஞர் காலமானார்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முதுபெரும் கலைஞர் க. வேலுக்கந்தன் அண்ணாவியார் நேற்று முல்லைத்தீவில் காலமானார்.

கோவலன்கூத்து, வேழம்படுத்த வீராங்கனை ஆகிய கூத்துக்களை இவர் நெறிப்படுத்தியுள்ளார். அத்துடன் பல நாட்டுக்கூத்துக்களிலும் இசை நாடகங்களிலும் இவர் நடித்துள்ளார். அண்மைக்காலமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் நடைபெற்று வரும் பல வீதி நாடகங்களையும் இவர் நெறிப்படுத்தியுள்ளார்.(அ-7)

### விஞ்ஞான பீடம் மூடப்பட்டது

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல்களைத் தொடர்ந்து விஞ்ஞானபீடம் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டது.

விஞ்ஞான பீட விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

---

### மகளிர்தினத்தை......

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

பின்வரும் இடங்களில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை - வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

வியாழக்கிழமை காலை - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

வெள்ளிக்கிழமை காலை - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

சனிக்கிழமை காலை - யாழ். நகரிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கருத்தரங்கு நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள்.

திங்கட்கிழமை முற்பகல் - யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,

செவ்வாயக்கிழமை முற்பகல் - யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

8ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம். (இ-135)

---

### குடாக்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

300 மீற்றர் தூரத்திலும், பண்ணைப் பாலத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்திலும் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-3-15-51-139-173)

---

### நான்கு யுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பி.பி.ஸிசிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் "எனது கணவன் உட்பட பல படையினரை விடுதலைப் புலிகள் அரசியல் கைதிகளாக வைத்துள்ளனர். அரசியலுடன் சம்பந்தப்பட்ட விடயத்தை அரசாங்கமே பேசி முடிவுகாண வேண்டும்" என்று தெரிவித்தார். (அ-3-7)

---

### இயக்கச்சியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்க இணக்கநிலை ஏற்படவில்லை.

அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கத்தை அடுத்தே இன்று முதல்தடவையாக சடலங்களை புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடாகியுள்ளது. (அ-3-9-15-51-139)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 - 12 - 1917



மறைவு 31 - 01 - 2000

### அமரர் செல்லப்பா ஐயாத்துரை

31-01-2000அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர், அன்புத் தெய்வம் செல்லப்பா ஐயாத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01-03-2000) புதன்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து விநியோகித்து எமது துக்கத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

குலம் கிறீம் ஹவுஸ்,
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

(C/11171)


பொருளியற் கல்லூரி
(கிளை நிறுவனம்)
கே.கே.எஸ் றோட்,
இணுவில்
A/L 2001
கணக்கீடு
புதிய பிரவு ஆரம்பமாகி
நடைபெறுகின்றது
யாழ். ஆசிரியர்
B. முகுந்தன்
(74090)

வீடியோ C.D
வெளியீடு
மம்முட்டி, , நக்மா
நடித்த
எதிரி
விஷ்ணு வீடியோ,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(C/11263)

எமது இன்றைய
வீடியோ C.D
வெளியீடுகள்
மம்முட்டி, நாசர்,
நக்மா
நடித்த
* எதிரி
* ஹேராம்
பிரதிகளை உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆர்க் வீடியோ
லைபிரறி
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11262)

மொடேர்ன் கல்வி நிலையம்
A/L 99 DAY CLASS
துரித மீட்டலுடன் கூடிய
வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன
அளவையியல்
ஆசிரியர் – S.S. மனோகரன்
காலம் – 02-03-2000 (வியாழன்)
நேரம் – பிற்பகல் 3.30 மணி
நெல்லியடி. கரவெட்டி.
(C/11250)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.